Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00


உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்
R.V.பந்தல் சேவை
முல்லைச்சாலை, தருமபுரம். T.P:0712-610008 (சி-11902) விநாயகர் வீதி, மயிலிட்டி.

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 வைகாசி-16 30-05-2005 திங்கட்கிழமை ஓசை 101

# சர்வசன வாக்கெடுப்பு நடத்துவது குறித்து சனாதிபதி சந்திரிகா தீவிர பரிசீலனை!

## சுனாமி அனர்த்த உதவிநிதி பெறுவதற்குப் பெரும் பிரயத்தனம்

(கொழும்பு)

**ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண உதவி நிதியைப் பெற்றுக்கொள்வதில் தீவிர அக்கறை காட்டிவரும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இதற்கென சர்வசன வாக்கெடுப்பொன்றை நடத்துவது குறித்து தீவிரமாகப் பரிசீலித்து வருவதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

கண்டியில் கடந்த 16ஆம், 17 ஆம் திகதிகளில் நடைபெற்ற சிறிலங்காவிற்கு உதவுவோர் மாநாட்டில் அறிவிக்கப்பட்ட சுனாமி அனர்த்த மீள் கட்டுமானத்திற்கான உதவித் தொகை 225 கோடி ரூபாயைப் பெற்றுக் கொள்வதற்கு விடுதலைப்புலிகளுடன் இணைந்த பொதுக்கட்டமைப்பு ஒன்று அவசியமாகவுள்ளது.

ஆனால் ஜே.வி.பியினர் இப் பொதுக்கட்டமைப்பை எதிர்ப்பதினால் உதவிநிதி கிட்டுவதில் இடையூறுகளை சனாதிபதி சந்திரிகா சந்திக்க வேண்டிய நிலையுள்ளது. இந்நிலையில் பொதுக் கட்டமைப்பை அமைப்பதற்கென சர்வசன வாக்கெடுப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## ராவய ஆசிரியர் விக்டர் ஐவனுக்கு மரண அச்சுறுத்தல் விடுப்பு



ராவய வார இதழின் ஆசிரியர் விக்டர் ஐவனுக்கு மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.கடந்த சில நாட்களாக காலியில் அமைந்துள்ள விக்டர் ஐவனின் வீட்டுக்கருகில் துப்பாக்கிதாரி ஒருவர் நடமாடியமை தொடர்பாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இதனை விக்டர் ஐவனின் வீட்டாரும் பிரதேச வாசிகளும் உறுதிப் படுத்தியுள்ளனர்.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சிவராமின் நினைவு நிகழ்வு ஒன்றிலும் விக்டர் ஐவன் பங்கேற்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.இதேவேளை இது தொடர்பில் தாம் தேசிய சர்வதேச ஊடக பாதுகாப்பு அமைப்புக்களுக்கு முறையிட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள விக்டர் ஐவன் பொலிசாருக்கு முறைப்பாடு

(12ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு மாவட்டத்தில் திடீரென சோதனை அதிகரிப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று மாலைமுதல் சோதனை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. மட்டக்களப்பு நகருக்குள் நுழையும் நகரிலிருந்து வெளியேறும் சகல பயணிகளதும் உந்துருளிகள் நிறுத்தப்பட்டும், வாகனத்திலிருந்து இறக்கப்பட்டும் தீவிரமாக சோதனையிடப்பட்டனர். அரசடிச் சந்தி, பார்வீதி, கோட்டைமுனை பாலம், புதிய கல்முனைவீதி உட்பட 20இற்கும் மேற்பட்ட இடங்களில் பொலிசார், இராணுவத்தினர் விசேட அதிர டிப்படையினர் ஆகியோர் இணைந்து சோதனை நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியிருந்தனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## பொதுக்கட்டமைப்பை உருவாக்காவிட்டாலும் தமிழர் தாயகப் பகுதிக்கு நிதியுதவி வழங்கப்படும்

### -ஆசிய அபிவிருத்தி வங்கி பிரதிநிதி தெரிவிப்பு

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்பை சிறிலங்கா அரசு உருவாக்காவிட்டாலும் ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட தமிழர் தாயகப் பகுதிக்கு சர்வதேச நிதியுதவி அளிக்கப்படும் என்று ஆசிய அபிவிருத்தி வங்கியின் வதிவிடப்பிரதிநிதி அலெக்சாண்ட்ரோ பையோ உறுதியளித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பொதுக்கட்டமைப்பு இல்லாவிட்டாலும் சர்வதேச உதவி வழங்கும் நாடுகள் உறுதியளித்த உதவிகள் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு,தென்னிலங்கை அனைத்து பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குப் பாரபட்சமின்றி சென்றடைய வேண்டும்.

தமிழீழ விடுதலைப்புலிகளின்

(12ஆம் பக்கம் பார்க்க)

## சிவராமின் படுகொலையைக் கண்டித்து நேற்று ஊடகவியலாளர்அமைதி ஊர்வலம்

(கொழும்பு)

ஊடகவியலாளர் சிவராமின் படுகொலையைக் கண்டித்து பாராளுமன்ற சுற்றுவட்டத்தில் இருந்து ஜப்பான் நட்புறவு பாலம் வரை ஊடகவியலாளர்கள் நேற்று அமைதி ஊர்வலம் ஒன்றை நடத்தினர். நேற்று மாலை கடும் மழைக்கு மத்தியிலும் இந்த ஊர்வலம் நடத்தப்பட்டது.இதன்போது ஊடகவியலாளர்கள் தமது வாய்களுக்கு கறுப்புத் துணியைக் கட்டியவாறு ஊர்வலத்தில் பங்கேற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சிவராமின் உருவப்படத்தை தாங்கிய வண்ணம் ஊர்வலத்தில் சென்றோர் சிவராம் கொலை செய்யப்பட்டு

(12ஆம் பக்கம் பார்க்க)



## நீராடச் சென்ற இருவர் நீரில் மூழ்கிப் பலி

(திருமலை)

திருகோணமலை பெரியகுளம் என்ற இடத்தில் குளத்தில் நீராடச் சென்ற இருவர் வள்ளம் கவிழ்ந்ததால் மரணமாகி உள்ளனர்.. வங்கி ஊழியரான சஞ்சீவன் மற்றும் சட்டத்தரணியான க.ரஜனிகாந்த் ஆகியோரே பலியானவர்களாவர்.

இவர்களின் சடலங்கள் தற்சமயம் திருகோணமலை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

திருமலை புத்தர் சிலை விவகாரத்தில் ஆஜரான சட்டத்தரணியே நீரில் மூழ்கி மரணமானார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.



## தமிழ்ச்செல்வன்-யுனிசெப் பிரதிநிதி; கிளிநொச்சியில் சந்தித்துப்பேச்சு

### புலிகளால் நினைவுப் பரிசும் வழங்கப்பட்டது

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களை யுனிசெப் நிறுவனத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ரெட்சைபன் சந்தித்துப்பேச்சு நடத்தியுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் நேற்றுக் காலை 11.00 மணிக்கு ஆரம்பமான இச்சந்திப்பு 12.15 மணிவரை நீடித்தது.

இச்சந்திப்பில் தமிழீழ விடுதலைப் புலிகள் சார்பாக தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் சோ.தங்கன், சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர் தியாகராஜா ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.யுனிசெப் சார்பாக இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ரெட்சைபன், யுனிசெப் வன்னி திட்டப் பணிப்பாளர் பெனிபுறூவ் ஆகியோர்

(12ஆம் பக்கம் பார்க்க)

# வரிவிளம்பரம்

## மணமகள் தேவை

யாழ்ப்பாணம் இந்துக் குடும்பத்தைச் சேர்ந்த 45 வயது, சொந்தமாக ஒரு நிறுவனத்தை நடாத்தி வருபவரும், யாழ்ப்பாணத்தில் சொந்த வீடும் உடைய விவாகரத்துப் பெற்றவருக்கு திருமணமாகாத அல்லது விதவையான பெண் தேவை. பெண் யாழ்ப்பாணத்தில் வந்து வசிக்கக் கூடியவராக இருத்தல் வேண்டும். சாதகம், படம் மற்றும் குடும்ப விபரங்களுடன் கடிதம் மூலம் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-திருமதி கமலா தேவி, 445, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (5378)

## காணி விற்பனைக்குண்டு


புதுக்குடியிருப்பு கைவேலியில் தென்னங்கன்றுகள் நடப்பட்ட நிலையில், 02 ஏக்கர் உறுதிக்காணி விற்பனைக்குண்டு. தொடர்புக்கு -நவரட்ணம் (நவம்),கைவேலி (காலை 7.30க்குமுன்வருகைதரவும்). (6160)

## சீமெந்துக்கல் விற்பனைக்குண்டு

4ஆம் கட்டை, மல்லாவி வீதி, வன்னிவிளான்குளத்தில் இயந்திரத்தால் செய்த சீமெந்துக்கல் விற்பனைக்குண்டு.

5" x 6" x 12" - ரூபா 23.00
4" x 6" x 14" - ரூபா 20.00

(6210)



சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களிற்கான உளவளத்துணை செயற்பாட்டு ஒருங்கிணைப்புக் கூட்டம் நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தினால் வடக்குகிழக்கு மனித உரிமைகள் செயலகத்தில் 28. 05. 2005 அன்று 10. 00 மணிக்கு அருட்திரு. கருணாரெட்ணம் அடிகளின் தலைமையில் நடைபெற்றது. இக்கலந்துரையாடலில் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். (படம்:-குகன்)

## செட்டிகுளம் மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் யானைகளால் வீடுகள் சேதம் பயிர்கள் நாசம்

(செட்டிகுளம்)

வவுனியா செட்டிகுளம் இரண்டாம் பண்ணை பகுதியில் காட்டு யானை வீடொன்றை தள்ளி வீழ்த்தியதையடுத்து உறக்கத்திலிருந்த இரண்டு சிறுமிகள் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வியாழக்கிழமை அதிகாலை 2.45 மணியளவில் இந்தச்சம்பவம் இடம் பெற்றுள்ளது. தில்லையம்பலம் அருந்தவராசா என்பவருடைய கல் வீடே யானையினால் தள்ளி வீழ்த்தி சேதமாக்கப்பட்டுள்ளது. செட்டிகுளம் மகாவித்தியாலயத்தின் மாணவிகளான அருந்தவராசா பிரியா(வயது -10), அருந்தவராசா யதுர்ஷா(வயது -07) ஆகிய இரண்டு சிறுமிகளுமே வீட்டுச்சுவரின் கீழ் அகப்பட்டு படுகாயமடைந்தவர்களாவர். யதுர்ஷா என்ற சிறுமிக்கு வலது கையிலும், இடது காலிலும் முறிவுகள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு மாதங்களாக செட்டிகுளம் பகுதியில் யானைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளதாகக் கிராமவாசிகள் தெரிவிக்கின்றனர். மதவாச்சி-மன்னார் வீதியில் செட்டிகுளத்திற்கு அப்பால், ஆறு மைல் தொலைவில் மக்கள் இடம் பெயர்ந்ததன் காரணமாக பற்றைகள் அடர்ந்து காடாகியுள்ள பெரிய கட்டு கிராமப் பகுதியில் கடந்த இரண்டு மாதங்களாக பொலிஸ் பாதுகாப்புடன் சிவிலுடையில் வந்தவர்களினால் அவ்வப் போது யானைகள் கொண்டு வந்து விடப்படுவதாகவும் இவ்வாறு கொண்டு வரப்பட்ட யானைகளே வயல்கள், தோட்டங்களைத் துவம்சம் செய்வதுடன், ஆவேசத்துடன் வீடுகளைத் தாக்கத் தொடங்கியிருப்பதாகவும் கிராமவாசிகள் தெரிவிக்கின்றனர்.

இது பற்றிகேட்ட போது வயதாகிய யானைகளை வேறிடங்களில் உள்ள சரணாலயங்களில் இருந்து இங்கு கொண்டு வந்து விடப்படுவதாக பொலிசார் தெரிவித்துள்ளதாகவும் கிராமவாசிகள் தெரிவிக்கின்றனர். இரண்டாம் பண்ணையைச் சேர்ந்த இரத்தினம் என்பவரும் அண்மையில் யானையின் தாக்குதலுக்குள்ளாகி காயமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. புளிதறித்த புளியங்குளம் பகுதியில் முச்சக்கர வண்டியொன்றையும் யானை தாக்கிச் சேதப்படுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

காட்டு யானைகள் ஊருக்குள் அவ்வப்போது வருவது வழக்கமாக இருந்தபோதிலும் அண்மைக் காலமாக கூட்டமாகவும், தனியாகவும் ஊருக்குள் பிரவேசிக்கும் யானைகளைச் சத்தமிட்டுத் துரத்தும் போது வழமைக்கு மாறாகத் துரத்தியவர்களை எதிர்த்துத் தாக்குவதற்காக யானைகள் மூர்க்கத்தனமாக ஓடிவருவதாகக் கிராமவாசிகள் தெரிவிக்கின்றனர். இந்த யானைகளில் ஒன்றிற்கு மணி கட்டப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது. (21)

## அரிப்பு கிராமத்திற்கு மின்விநியோகம் மின்சார சபையினர் வாக்குறுதி

(மன்னார்)

மன்னார் அரிப்பு கிராமத்திற்கு மினசார விநியோகம் விரைவில் வழங்கப்படவுள்ளது.

இதற்கான பூர்வாங்கவேலைகள் தற்சமயம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

அப்பகுதி மக்கள் உயர் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டதையடுத்து மின்விநியோகம் உடன் வழங்கப்படவுள்ளதாக உறுதியளிக்கப்பட்டுள்ளது.

சுனாமி அனர்த்தத்தின்பின் அரிப்பு கிராமக் கடலிலும் இயற்கைக்கு மாறான கடல்கொந்தளிப்பு ஏற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (81)

## வட்டக்கச்சி-மாவடி வலய மாவீரர் பெற்றோர் கௌரவிப்பும் வீரமுரசு கலை நிகழ்ச்சியும்

28.05.2005 மாலை 5 மணிக்கு வட்டக்கச்சி பிரதேச மாவடி வலய மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வும் வீரமுரசு கலை நிகழ்ச்சியும் இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலை வளாகத்தில் வட்டக்கச்சி பிரதேச தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் பொன்னுத்துரை தலைமையில் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

முதலாவதாக மாவீரர்களின் பெற்றோர்கள் சில்வாவீதி வழியாக பாண்ட் இசையுடன் பாடசாலை மைதானத்திற்கு அழைத்து வரப்பட்டு மாவீரர்களின் திருவுருவப்படங்களிற்கு சுடரேற்றி மாலை அணிவித்து மலர்வணக்கம் செலுத்தப்பட்டது.

இந்நிகழ்விற்கு பொதுச்சுடரினை கரைச்சிப்பிரதேச விசேட ஆணையாளர் பொன்.நித்தியானந்தன் ஏற்றி வைத்ததைத் தொடர்ந்து கிளி. மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் அருள் தேசியக்கொடியினை ஏற்றிவைத்தார்.

அடுத்து மாவீரர் சங்கர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மாவீரர் பணிமனையைச் சேர்ந்த அரசையா சுடர் ஏற்றி வைத்தார்.

அடுத்து மாவீரர்களின் திருவுருவப்படங்களிற்கு அவர்களின் பெற்றோர்கள், எல்லைப்படை மாவீரர்களின் படங்களிற்கு அவர்களின் துணைவியர் சுடர்களை ஏற்றி வைத்தனர்.

அடுத்து கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் பசுபதிப்பிள்ளை, புலிகளின் குரல் நிறுவனத் துணைப் பொறுப்பாளர் செயல்வீரன், கரைச்சிப் பிரதேசசபை விசேட ஆணையாளர் பொன்.நித்தியானந்தன் ஆகியோர் நினைவுரை நிகழ்த்தினார்கள். இந்நிகழ்வில் அறிவுச்செல்வன் மாலைநேர வகுப்பு மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள், கவிதைகள், பாடல், தமிழீழ மகளிர் இசைக்குழுவினரின் இன்னிசைகானம் என்பன நடைபெற்றன. (சோ,12)

## 275 சிறார்களுக்கு முதன்நன்மை வழங்கல்

(மன்னார்)

மன்னார் புனித செபஸ்திரியார் தேவாலயத்தில் 275 சிறுவர், சிறுமியருக்கு முதல் நன்மை வழங்கும் வைபவம் இடம்பெற்றுள்ளது. நேற்றுக் காலை 8.00 மணியளவில் இடம் பெற்ற இச்சடங்கில் ஞானப் பெற்றோர் முன்னிலையில் பேராயர் பங்குத்தந்தை எஸ்.எமிலியானூஸ்பிள்ளை, உதவிப் பங்குத்தந்தை சுரேஸ் ரெவ்வல் ஜிம்ரோன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (18)

## பணிநிலை வெற்றிடம்

முல்லை. தெற்கு பனை,தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் செம்மலை, அளம்பில். –

01.பதவி:- கிளை மேற்பார்வையாளர்
சம்பளக் குறியீட்டு இலக்கம்:- 207/12
சம்பள அளவுத் திட்டம்:- (5500-80 x10-90 x10-7200)
66000-960 x 10-1080 x 10-86400

**தகைமைகள்:-** கூட்டுறவு பணியாளர் 13 ஆவது சம்பளத்திட்டத்தில் களஞ்சியக் காப்பாளர்/கொள்வனவு உத்தியோகத்தர்/கிளை நிலை மேற்பார்வையாளர்/கிளை நிலை முகாமையாளர் பதவிகளில் 02 வருட அனுபவம் அல்லது கூட்டுறவு பணியாளர்14 ஆவது சம்பளத்தில் அமைந்த மேற்கூறிய பதவிகளில் 04 வருட அனுபவம்.

அல்லது

கூட்டுறவு பணியாளர் உயர்தர சான்றிதழ்/க.பொ.த(உ/த) 03 பாடசித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் களஞ்சியக் காப்பாளர் பதவியில் 01 வருட அனுபவம்/களஞ்சியக் காப்பு தொடர்பாக பயிற்சி நெறியினை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

கூட்டுறவுப் பணியாளர் சாதாரண சான்றிதழ்/க.பொ.த.(சா/த) இரு அமர்வுகளிற்கு மேற்படாது கணிதம், தமிழ் உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களிலான சித்தி அத்துடன், களஞ்சியக் காப்பாளர் பதவியில் 04 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

**வயதெல்லை:-** 21~45 (கூட்டுறவுப் பணியாளர்களிற்கு வயதெல்லை கணிக்கப்படமாட்டாது)

02.பதவி:- கிளை முகாமையாளர்
சம்பளக்குறியீடு இலக்கம்:- 208/13
சம்பள அளவுத்திட்டம்:- (5250-75x10-80x10-6800)
63000-900x10-960x10-81600

**தகைமைகள்:-** கூட்டுறவுப் பணியாளர் 14 ஆவது சம்பளத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான 02 வருடத்திற்குக் குறையாத அனுபவம். அல்லது கூட்டுறவுப் பணியாளர் 15 ஆவது சம்பளத்திட்டத்திற்கு அமைந்த சம்பந்தப்பட்ட துறையிலான பதவியின் 04 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

அல்லது

கூட்டுறவுப் பணியாளர் சாதாரண தர சான்றிதழ் க.பொ.த (சா/த) இருதடவைகளுக்கு மேற்படாது கணிதம், தமிழ் உட்பட 04 திறமைச்சித்தியுடன்06 பாட சித்தி அத்துடன் சம்பந்தப்பட்ட துறையில் 02 வருட அனுபவம்.

**வயதெல்லை:-** 21~45 (கூட்டுறவுப் பணியாளர்களிற்கு வயதெல்லை கணிக்கப்படமாட்டாது)

03.பதவி:-விற்பனை உதவியாளர்
சம்பளக்குறியீட்டு இலக்கம்:- 308/15
சம்பள அளவுத்திட்டம்:- (4750 - 6100)
65x10 - 70x10

அ) கூட்டுறவுப் பணியாளர் 17 ஆவது சம்பளத்திட்டத்தில் அமைந்த விற்பனை உதவியாளர் பதவியில் 05 வருட அனுபவம்.

ஆ) கூட்டுவுப் பணியாளர்(சாதாரணம்)க.பொ.த (சாதாரணம்) இரு அமர்வுகளிற்கு மேற்படாது கணிதம்,தமிழ் உட்பட 06 பாடங்களிலான சித்தி

**வயதெல்லை:-** 21~45 (கூட்டுறவுப் பணியாளர்களிற்கு வயதெல்லை கணிக்கப்படமாட்டாது)

குறிப்பு:- கடித உறையின் மேல்பக்க மூலையில் என்ன பதவிக்கான விண்ணப்பம் எனக் குறிப்பிடப்படவேண்டும்.

**ஆண் பாலார் மட்டும் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பங்கள் சுயமாகத் தயாரிக்கப்பட்டு சொந்தக் கையெழுத்தில் பூர்த்தியாக்கி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.**

மேற்குறிப்பிட்ட பதவிகளுக்கு விண்ணப்பிப்போர் எதிர்வரும் 21.06.2005 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடிய வகையில் பதிவுத்தபால் மூலமே அல்லது நேரடியாகவே தலைவர், முல்லை தெற்கு ப.தெ.வ.அ.கூ.சங்கம், செம்மலை அளம்பில் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

**தலைவர்,**
**முல்லை தெற்கு ப.தெ.வ.அ.கூ.சங்கம்,**
**செம்மலை.**

(சி.12025)

# அல்-ஹைதா அமைப்பின் பலம் அதிகரிப்பு; அமெ.எதிர்ப்பு நடவடிக்கை மறு மதிப்பீடு !

அமெரிக்க பத்திரிகை தகவல்

(வோஷிங்டன்)

**அல் -ஹைதா இயக்கம் கடந்த சில வருடங்களில் பெரிதும் பலமடைந்துள்ளது என்பதைக் கருத்திற்கொண்டு புஷ் நிர்வாகம் தனது பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளை மறு மதிப்பீடு செய்து வருகின்றதென்று வோஷிங்டனில் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

2001ஆண்டு செப்ரெம்பர் மாதம் 11ஆம் திகதி அமெரிக்காவின் இரட்டைக் கோபுரத்தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய அல்-ஹைதா தலைவர்களை சிறை பிடித்து அவர்களைக் கொலை செய்வ தென்ற அடிப்படையில் இந்த மறு மதிப்பீடு இடம்பெறுகின்றது என்று சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் இன் உயர் ஆலோசகர் தெரிவித் துள்ளார்.

ஈராக்கில் வளர்ச்சியடைந்து வரும் புதியதொரு பயங்கரவாத சந்ததியை முறியடிப்பது என்ற உறுதிப்பாட்டுடன் அமெரிக்க நிர்வாகம் நடவடிக்கை எடுத்து வருகின்றது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



பெலாரஸ் தலைநகர் மின்ஸ்க் நகரில் செல்ல நாய்களுக்கான அழகுப் போட்டி நடந்தது. இதில் ஒரு நாய் பாவுன் ஆடையணிந்து மேடையை வலம் வந்த காட்சி.

## பாடசாலை தொடங்கும் முன் 20 நிமிட கட்டாய உடற்பயிற்சி

(வோஷிங்டன்)

கொக்கோலா போன்ற பானங்களை அதிகமாகக் குடிப்பதாலும், பாஸ்ட்புட் உணவுகளை அதிகம் சாப்பிடுவதாலும் சிறுவர், சிறுமிகளுக்கு உடல் பெருத்து விடுகிறது. இதைத்தடுப்பதற்காக அமெரிக்காவின் பல நகரங்களிலுள்ள பாடசாலைகளில் கொக்கோலாவுக்கும், நொறுக்குத் தீனிகளுக்கும் தடைவிதித்துவிட்டனர். அத்துடன் வகுப்புகள் தொடங்கும் முன்பு 20 நிமிடம் கட்டாய உடற்பயிற்சியும் அமுல்படுத்தப்படுகிறது.

## ஈராக்கில் தீவிரவாதிகளிடம் சிக்கிய ஜப்பான் நாட்டுப் பணயக் கைதி சுட்டுக்கொலை

ஈராக்கில் தீவிரவாதிகளின் பிடியில் சிக்கி இருந்த ஜப்பான் நாட்டுப் பணயக்கைதி சுட்டுக் கொல்லப்பட்டார்.

ஈராக்கில் தங்கி சீரமைப்புப் பணியில் ஈடுபட்டு வரும் வெளிநாட்டினரை அங்குள்ள தீவிரவாதிகள் பணயக் கைதிகளாகப் பிடிப்பதோடு கோரிக்கை நிறைவேறாத போது சுட்டுக்கொன்று விடுகிறார்கள்.


இவற்றில் " அன்சார்-அல்-சுன்னா" என்ற அமைப்பும் ஒன்றாகும். இந்த இயக்கத்தினர் கடந்த எட்டாம் திகதி ஜப்பான் நாட்டைச் சேர்ந்த அகிஹிகோ சைடோ (வயது-44) என்பவரைக் கடத்திச் சென்றனர். இவர் ஒரு பாதுகாப்பு நிறுவனத்தில் மேலாளராகப் பணியாற்றி வந்தவர்.

இந்த நிலையில் பணயக் கைதியாக இருந்த சைடோவைச் சுட்டுக்கொன்றுவிட்டதாக அன்சார் -அல்-சுன்னா அமைப்பு நேற்று முன் தினம் அறிவித்தது. அவர் இரத்த வெள்ளத்தில் பிணமாகக் கிடக்கும் வீடியோக் காட்சியை இணையத்தளத்தில் வெளியிட்டது.

பிணத்திற்கு அருகில் நிற்கும் ஒருவர் " இது உனக்கு வழங்கப்பட்ட தண்டனை" என்று குரல் கொடுக்கும் காட்சியும் அதில் பதிவாகி இருக்கிறது.



அமெரிக்கப் பாதுகாப்புத் திணைக்களம் கெயிட்டியில் உள்ள அமெரிக்கர்களை வெளியேறும் வண்ணமும், போர்ப் பிரதேசமான கரிபியன் ஊடாகப் பயணிக்க வேண்டாம் என்றும் எச்சரித்ததையடுத்து பெருமளவு கிறிஸ்தவர்கள் கெயிட்டியில் அமைதி வேண்டிப் பிரார்த்தனையில் ஈடுபடுகின்றனர்.




பெய்றூட் அயுக்காரில் அமெரிக்கத் தூதரகத்தின் முன் சுனி முஸ்லிம்கள் குர் ஆனைக் கையிலேந்தி ஆர்ப்பாட்டம் நடத்துகின்றனர்.

### நகரசபை முன்னாள் தலைவர் சுட்டுக்கொலை

(பாக்தாத்)

ஈராக்கிலுள்ள கிர்குக் என்ற இடத்தில் நகரசபை முன்னாள் தலைவர் சமான் அல்ஜிபூரி. இவரை நேற்று முன்தினம் இனந் தெரியாத நபர் ஒருவர் சுட்டுக் கொன்றார்.

கொல்லப்பட்ட ஜிபூரி அரபு மலை வாழ் மக்கள் இனத் தலைவராகவும் இருந்தார். கடந்த இரண்டு ஆண்டுகளில் அந்தப் பகுதியில் 12 இற்கும் மேற்பட்ட தலைவர்கள் கொல்லப்பட்டிருக் கிறார்கள் என்பது குறிப்பிடத் தக்கது.



கெயிட்டியில் ஐ.நா அங்கீகாரம் பெற்ற பிரேசில் அமைதிப் படையினர் ரோந்துப் பணியில் ஈடுபடுகின்றனர்.

## ஈராக்கியரைக் கொன்ற வழக்கில் அமெரிக்க வீரர் விடுவிப்பு

ஈராக்கியர் ஒருவரை அடித்துக் கொன்ற வழக்கில் சிக்கிய அமெரிக்கத் கடற்படை வீரர் குற்றமற்றவர் என்று விடுவிக்கப்பட்டார்.

ஈராக்கில் அமெரிக்க-பிரிட்டன் கூட்டுப்படைகள் முகாமிட்டுள்ளன. தீவிரவாதிகள் அங்கு அடிக்கடி வெடிகுண்டுத் தாக்குதல் நடத்துகின்றனர். 2003 நவம்பரில் பாக்தாத்தில் செஞ்சிலுவைச் சங்க கட்டடத்தில் குண்டு வெடித்து 12 பேர் பலியாகினர்.

இதற்குக் காரணமானவர்களைப் பிடிக்க அமெரிக்க கடற்படைப்பிரிவு வீரர்கள் தேடுதல் வேட்டை நடத்தினர். பாக்தாத்தில் அடுக்கு மாடிக் குடியிருப்பில் பதுங்கியிருந்த அல்-ஜமாதி என்பவரைக் கைது செய்து சித்திரவதை செய்தனர். சி.ஐ.ஏ.,ஏஜென்ட்டி டம் அவரை ஒப்படைத்தனர். அபு கிரைப் சிறையில் அடைக்கப்பட்ட ஜமாதி, சில மணி நேரத்தில் இறந்தார்.

ஜமாதியின் சாவுக்கு கடற்படை வீரர் லெப்டினனட் ஆண்ட்ரூலெட் போர்டு தான் காரணம் என்று குற்றம் சாட்டப்பட்டது. அமெரிக்க இராணுவ நீதிமன்றில் அவர் மீது விசாரணை நடந்தது. இவ் வழக்கில் தீர்ப்பு கடந்த வெள்ளிக்கிழமை அளிக்கப் பட்டது. இவ்வழக்கில் இருந்து லெட்போர்ட்டை நீதிபதிகள் விடுவித்தனர்.

### சேலோரோப்பில் சிலை

இங்கிலாந்தைச் சேர்ந்த ஓவியக் கல்லூரி மாணவி ஹெலன் கன்னிங்ஹாம் சேலோடேப்புக்களைக் கொண்டு சிலைகளை உருவாக்கி இருக்கிறார். இந்தச் சிலைகளை விற்று அதன் மூலம் கிடைக்கும் பணத்தைக் கொண்டு தன் படிப்பிற்கு ஆகும் செலவுகளைச் சமாளித்து வருகிறார்.

## போலி வாழைப்பழத்திற்குள் போதைப் பொருள் கடத்தல்

-அமெ.அதிகாரிகளிடம் மாட்டியது

ஈக்குவாடார் நாட்டில் இருந்து அமெரிக்காவிலுள்ள மியாமிக்கு கப்பலில் வாழைப்பழம் அனுப்பப்பட்டிருந்தது. 1,080 பெட்டிகளில் வந்த வாழைப்பழத்தை சுங்க அதிகாரிகள் சோதனையிட்ட போது சில வாழைப்பழங்கள் வழக்கத்தை விட கடினமாக கல் போல இருந்தது, அதை வெட்டிப் பார்த்த போது தான் அவை போலிப் பழங்கள் என்பதும் அவற்றில் 338 கிராம் போதை மருந்து அடைக்கப்பட்டு இருந்தும் தெரிய வந்தது. பைபர்கிளாசை வாழைப் பழம் போல வார்த்து எடுத்து அவற்றில் போதை மருந்து அடைத்து வெளிப்பகுதியில் வாழைப்பழம் போல வர்னம் பூசி இருந்தனர்.

இந்தப் போலிப் பழங்களை நிஜப்பழங்களுடன் சேர்த்து அனுப்பி இருந்தனர். இதனையடுத்து இந்த வாழைப்பழ வியாபாரி அமெரிக்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.




டொனிமினிக்கன் குடியரசில் ஒரு செய்தியாளர் மாநாட்டில் கெயிட்டி மந்திரி (இடது) டொமினிக்கன் மந்திரியை வாழ்த்துகின்றார்.

# திருகோணமலை புத்தர்சிலை விவகாரம்;

# தமிழர்களை மதவெறியராகக் காட்டும் சதி

## —வண.பிதா கருணாரட்ணம் அடிகளார்



(அலுவலக செய்தியாளர்)

**தமிழ் மக்கள் செறிந்து வாழும் திருமலை நகரப்பகுதியில் திடீரென புத்தர்சிலையினை அமைத்துள்ளமையானது தமிழர்களை மதவெறியர்களாகவும் வேறு மதங்களைப் பொறுத்துக்கொள்ளாதவர்கள் என்றொரு நிலைப்பாட்டினை உருவாக்குவதற்கு மேற்கொள்ளப்பட்டுவரும் பாரிய சதிமுயற்சியாகும். இவ்வாறு வணபிதா கருணாரட்ணம் அடிகளார் புத்தர்சிலை நிலவரம் குறித்து தனது கருத்தினைத் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்; எந்தக்கட்டத்திலும் தமிழ் மக்கள் மதவெறியர்களோ அன்றி எந்த மதத்திற்கும் எதிரானவர்களோ அல்லர். அத்துடன் எந்தக் கோவில்களை அமைப்பதற்கோ, சிலைகளை வைப்பதற்கோ தடையானவர்களும் அல்லர். ஆனால் பொருத்தமற்ற இடத்தில் பொருத்தமில்லாத விதமாக மக்கள் மத்தியில் தேவையில்லாத ஒன்றினை திணிக்கின்றபொழுது அதனை மக்கள் இனரீதியாகவோ, மதரீதியாகவோ நோக்காமல் இது ஒரு மதத்திணிப்பு என்கின்ற கண்ணோட்டத்துடனேயே பார்க்கின்றனர்.

மதமாற்றத் தடைச்சட்டத்தினை அவசர அவசரமாகக் கொண்டுவரும் சிறிலங்கா அரசு இப்படியான ஒரு ஆட்சிப்பீடத்திலே பௌத்த மதத்தை மட்டும் வைத்துக்கொண்டு அதே மதத்தினை அந்த மதத்தைச் சாராத மக்கள் மீது திணிக்க முற்படுகின்றது.

நிச்சயமாக வட கிழக்கில் இந்துக்கள், கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள், பௌத்தர்கள் அனைவரும் எந்த மதவெறியும் அற்றவர்களாக சந்தோசமாக வாழ்ந்து வருகின்றனர். இந்த நிலையினை மாற்றுவதற்கு மேற்கொள்ளப்பட்டுவரும் இத்தகைய செயற்பாடுகளை நாங்கள் அனுமதிக்க முடியாது.

இது சமாதானத்திற்குப் பாரிய இடையூறாக அமைந்துவிடும் என்பதனை முக்கியமாகச் சொல்லி வைக்க விரும்புகிறோம் என்றார். (சோ)

## உள ஆற்றுப்படுத்தலுக்கான மாணவர் கல்விச் சுற்றுலா

(முல்லைத்தீவு)

சுனாமிப் பேரலையால் பாதிப்படைந்த மாணவர்களின் உள ஆற்றுப்படுத்தலுக்கான கல்விச் சுற்றுலாவை செம்மலை மகா வித்தியாலயம் மேற்கொண்டது.

"சீட்ஸ்" (Seeds) நிறுவனத்தின் நிதி உதவியுடன் இம் மாணவர்களின் கல்விச் சுற்றுலா மேற்கொள்ளப்பட்டதாகவும் அதற்கு உதவிய நிறுவனத்திற்கு செம்மலை மகாவித்தியாலய அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் நன்றியைத் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (20)

## முழங்காவிலில் வாராந்தச் சந்தை நான்காம் திகதி முதல் செயற்படும்

பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வாராந்தசந்தை வரும் நான்காம் திகதியிலிருந்து முழங்காவிலில் இயங்கவுள்ளது.

இச்சந்தை ஊடாக உற்பத்தியாளர்களும், வியாபாரிகளும் தமது பொருட்களை சந்தைப்படுத்தியும் கொள்வனவு செய்தும் பயன்பெறுமாறு வேண்டப்படுகின்றனர். (34)

## கால்நடைகள் தொல்லை

புளியம் பொக்கணை,பெரியகுளம் பகுதியில் 2005 ஆம் ஆண்டிற்கான சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் இன்னமும் கட்டாக்காலி கால்நடைகள் உரிய முறையில் கட்டுப்படுத்தப்படவில்லை. இரவு வேளைகளிலும் பகல் வேளைகளிலும் இவை பயிர் நிலங்களை நாசம் செய்து வருகின்றன. விதைப்பினை மேற்கொண்டு இரண்டு மாதங்களாகியும் கால்நடைகள் கட்டுப்படுத்தப்படவில்லை. எனவே இப்பகுதிகளுக்குப் பொறுப்பானவர்கள் கவனத்தில் எடுத்து கால்நடைகளைக் கட்டுப் படுத்தித்தருமாறு அப்பகுதி விவசாயிகள் வேண்டியுள்ளனர்.(12)



போரினால் பாதிக்கப்பட்டு வறுமைக்கோட்டின்கீழ் உள்ள உடையார்கட்டுப் பிரதேசத்தில் வதியும் 600 குடும்பங்களுக்கு உடுபுடவைகளை சீடோ (SEDO) நிறுவனம் கடந்த 27ஆம் திகதியன்று வழங்கியது. சீடோ நிறுவனத்தினர் மக்களுக்கு உடுபுடவைகளை வழங்குவதனைப் படத்தில் காணலாம். (படம்—சோதி)

## ஓமந்தை தடைமுகாம் பகுதி படையினரால் புனர்நிர்மாணம்

(அலுவலக செய்தியாளர்)

ஓமந்தை தடைமுகாம் உயர்பாதுகாப்பு வலயம் படையினரால் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு வருகின்றது.

கடந்த சில வாரங்களாக வவுனியா தடைமுகாம் உயர்பாதுகாப்பு வலயம் படையினரால் புனர்நிர்மாணம் செய்யப்பட்டும், புதிய இராணுவ காவலரண்கள் அமைக்கப்பட்டும் வருகின்றது.

அத்துடன் கனரக வாகனங்களின் உதவியுடன் மண் அணைகள் அமைக்கப்பட்டும், முட்கம்பி வேலிகள் மீளவும் சீர் செய்யப்பட்டு வருவதையும் அண்மை நாட்களாக அவதானிக்க முடிகின்றது. (தீ)

## உயர்தரத் தேர்வுக்குத் தோற்றவுள்ள மாணவர் வழிகாட்டல் கருத்தமர்வு

தமிழ், அளவையியலும் விஞ்ஞான முறையும் ஆகிய பாடங்களுக்கான சிறப்புச் செயலமர்வு கிளிநொச்சியில் கிளி/மத்திய கல்லூரியிலும், முல்லைத்தீவில் மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியிலும் இன்றும், நாளையும் நடைபெறவுள்ளன. துணுக்காய், மருதங்கேணி மாணவர்கள் பொருத்தமான இடத்தில் பங்கு பற்றுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

இன்று திங்கட்கிழமை தமிழ் காலை 9.00 மணிக்கு கிளி/மத்திய கல்லூரியிலும், காலை 9.00 மணிக்கு மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியிலும், நாளை செவ்வாய்க்கிழமை அளவையியலும் விஞ்ஞான முறையும் காலை 9.00 மணிக்கு மு/புதுக்குடியிருப்பு மத்தியகல்லூரியிலும், தமிழ் காலை 9.00 மணிக்கு கிளி/மத்தியகல்லூரியிலும், முதலாம் திகதி புதன்கிழமை அளவையியலும் விஞ்ஞானமுறையும் காலை 9.00 மணிக்கு கிளி/மத்திய கல்லூரியிலும், தமிழ் காலை 9.00மணிக்கு மு/புதுக்குடியிருப்பு மத்தியகல்லூரியிலும் நடைபெறவுள்ளன. மாணவர்களுக்கான உணவு,தேநீர் வழங்கப்பெறும்.

## சுயதொழில் முயற்சி கடன் வழங்கல்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனத்தினால் யு.என்.டி.பி நிறுவனத்தின் உதவியுடன சுயதொழில முயற்சிக்கான கடனுதவி வழங்கும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை பூநகரி நல்லூர் கிராம முன்பள்ளியில் பெ.அ.பு. நிறுவன பிரதேச இணைப்பாளர் ஜீவாஜினியின் தலைமையில் நடைபெற்றது.

இதில் பெ.அ.பு. நிறுவனப்பணிப்பாளர் வினோ, திட்ட செயற்பாடுகள் தொடர்பான கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார். நல்லூர் கிராம அலுவலர் சு.உலகநாதன் தொழில்களின் முக்கியத்துவம் தொடர்பான கருத்துக்களைப் பகிர்ந்துகொண்டார். கண்டாவளை, பூநகரி, வட்டக்கச்சி ஆகிய பகுதிகளிலிருந்து 17 பேருக்கு 290000 ரூபா கடன், கோழி, மாடு வளர்ப்பு, விவசாயம் போன்ற தொழில்களுக்கென வழங்கப்பட்டது. (கு)

## த.பு.கழகம் உலமா சபைக்கு கணனித்தொகுதி அன்பளிப்பு

திருகோணமலை கிண்ணியாப் பிரதேசசபை ஜம் இயமத்துல் உலமா சபையின் அண்மையில் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினரிடம் அலுவலக செயற்பாடுகளுக்கான கணனித்தொகுதி ஒன்றினை வழங்கி உதவுமாறு கோரியிருந்தனர். அதற்கமைய நேற்று முன்தினம் காலை 10.30 மணியளவில் திருகோணமலை தமிழர் புனர்வாழ்வுக்கழக மாவட்டப் பணிப்பாளர் சு.விஜயகுமார் மாவட்டச் செயலகத்தில் வைத்து 51,950 ரூபா பெறுமதியான கணனித்தொகுதி ஒன்றினை கிண்ணியா உலமா சபையினருக்கு அன்பளிப்பாகக் கையளித்துள்ளார்.

இதனை கிண்ணியா உலமா சபைச் செயலாளர் ஜனாப் எம்.வை. ஹதியத்துல்லாஹ் மௌலவி அவர்களும், ஜனாப்சுஜது அவர்களும் பெற்றுக்கொண்டனர். (25)

## சீரான குடிநீர் விநியோகம் இன்மையால் அசௌகரியம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் சீரான நீர்விநியோகம் ஏற்படுத்தப்படாமையால் அப்பகுதி மக்கள் பெரும அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பு ஆரையம்பதி, ஒல்லிகுளம் நலன்புரி நிலையங்களுக்கு கடந்த மூன்று நாட்களுக்கு மேலாக குடிநீர் விநியோகிக்காமையால் அங்குவசிக்கும் சுமார் 300 குடும்பங்கள் பெரும் அவலங்களை எதிர்கொண்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## மன்னார் காணி ஆணையாளர் திணைக்களத்தால் 1760 காணிப்பிணக்குகளுக்குத் தீர்வு

(மன்னார்)

மன்னார் மாவட்ட காணி ஆணையாளர் திணைக்களத்தினால் 1760 காணிப்பிணக்குகள் தீர்க்கப்பட்டுள்ளன

குறிப்பாக நீண்டகாலம் காணி உறுதி இல்லாமல் இருக்கும் குடியிருப்பாளர்களுக்கு காணி உறுதிகள் வழங்கித்தீர்க்கப்பட்டன.

இவையாவும் மாந்தை மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள கூராய், தேவன்பிட்டி, விடத்தற்தீவு, வெள்ளாங்குளம் போன்ற இடங்களிலும், மடு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பண்டிவிரிச்சான், ...ட்சனாமருதமடு போன்ற இடங்களிலும், நானாட்டான் பிரதேச செயலர் பிரிவில் எரிசுட்டான், வங்காலை போன்ற இடங்களிலும், மன்னார் பிரதேச செயலர் பிரிவில் பள்ளிமுனை, உப்புக்குளம் போன்ற இடங்களிலும் தீர்த்து வைக்கப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட காணிகள் திணைக்கள ஆணையர் தெரிவித்தார். (18)

## பிரதேச இணைப்பாளருக்கான முகாமைத்துவ பயிற்சி

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பிரதேச இணைப்பாளர்களுக்கான முகாமைத்துவப் பயிற்சி கடந்த வியாழன்,வெள்ளி,சனி ஆகிய மூன்று நாட்களும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன மனித வள பகுதியைச் சேர்ந்த அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இதில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் கரிகாலன் முல்லைத்தீவு கால்நடை வைத்தியர், கிளிநொச்சி மாவட்ட ...பாசன பொறியியலாளர், பனை தென்னைவள உத்தியோகத்தர்கள் ஆகியோர் ...ந்து கொண்டனர். (05)

## இரணைப்பாலை கிராமத்தில் 'நியாப்' கலந்துரையாடல்

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு இரணைப்பாலைக் கிராமத்தில் நியாப் II திட்டத்தின் விசேட கூட்டம் கடந்த வியாழனன்று காலை 9மணிக்கு புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் செ. தயாணந்தா தலைமையில் இடம்பெற்றது.

ஆரம்ப நிகழ்வாக மங்கல விளக்கு ஏற்றப்பட்டது. தொடர்ந்து தேசியக் கொடியை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன துணைப்பொறுப்பாளர் சின்னண்ணா ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து நியாப் பிரதித்திட்டப் பணிப்பாளர் கருத்துரையினை வழங்கினார். தொடர்ந்து இரணைப்பாலை பங்குத்தந்தை வணபிதா ஆனந்தகுமார் அடிகளார் உரையாற்றினார். இதனையடுத்து த.பொ.மே. நிறுவனத்துணைப் பொறுப்பாளர் சின்னண்ணா, நியாப் திட்ட சமூக வலுவூட்டாளர் சி. நாமிளா மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச அரசியல் துறைப்பொறுப்பாளர் உட்பட பலர் உரையாற்றினர்.

இக்கூட்டத்தில் சுமார் 350 இற்கு மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர். (08)

# அரசாங்க சுற்றுநிருபங்களில் தமிழ் மொழி புறக்கணிப்பு

## தமிழ்ப் பகுதி திணைக்கள அதிகாரிகள் விசனம்

(யாழ்ப்பாணம்)

**யாழ்.மாவட்டத்திலுள்ள அரச செயலகங்களுக்கு மத்திய அரசாங்கத்தினால் அனுப்பப்படும் சுற்றுநிருபங்களில் தமிழ் மொழி புறக்கணிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

குறிப்பாக யாழ்.மாவட்ட அரச செயலகம் உட்பட இங்குள்ள திணைக்களங்கள் பலவற்றிற்கும் அரசாங்கத்தினாலும் சனாதிபதி செயலகம், பிரதமர் செயலகம் அமைச்சுக்கள் என்பவற்றால் அனுப்பப்படும்சுற்றுநிருபங்களில் தமிழ் தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டுவருகின்றது.

அதாவது இவ்வாறான சுற்றுநிருபங்கள் பலவும் தனிச்சிங்களத்தில் அச்சிட்டு அனுப்பப்படுகின்றன. சில சுற்றுநிருபங்கள் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் அச்சிட்டு அனுப்பப்படுகின்ற போதும் அவற்றில் உள்ள தமிழ் விபரங்கள், வியாக்கியானங்களில் பெருவாரியான எழுத்துப்பிழை, இலக்கண வழு என்பவற்றுடன் காணப்படுகிறது.

இதனால் இச்சுற்றுநிருபங்களிணைப் படித்து அவற்றில் உள்ள வியாக்கியானங்களையும் விளக்கங்களையும் அறிவுறுத்தல்களையும் அறிந்து கொள்வதில் தாம் பெரும் இடர்பாடுகளை அனுபவிப்பதாக யாழ். மாவட்டத்திலுள்ள அரச திணைக்கள அதிகாரிகள் பலரும் விசனம்தெரிவிக்கின்றனர். (33)

# அதிக வலுக்கொண்ட மின் இணைப்பு இல்லை சாவகச்சேரி நகரிற்கு நீர் விநியோகம் தாமதம்

(தென்மராட்சி)

சாவகச்சேரி நகரத்திற்கு குடிநீர் வழங்குவதற்கு அதிக வலுமின் இணைப்பு வழங்கப்படாமையால் தாமதம் ஏற்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகரத்திற்கு குடிநீர் வழங்குவதற்கென நீர்ப் திட்டத்தின் உதவியுடன் நகரத்தின் பிரதான பகுதிகளிலும், சந்தைப்பகுதிகளிலும் நாற்பது குடிநீர்ப்பைப்புகள் அமைக்கப்பட்டு சில மாதங்கள் கடந்துவிட்ட நிலையிலும் இந்த நீரை வழங்குவதற்கு அதிக வலுமின் இணைப்பு இதுவரை வழங்கப்படாமையால் நீரை மக்களுக்கு வழங்குவதில் தாமதமேற்பட்டுள்ளது.

விரைவில் நீர் மக்களுக்கு கிடைக்க வேண்டும் எனில் விரைவில் மின் இணைப்பை வழங்க சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென நகரசபை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (28)

# - யாழ். போதனாவைத்தியசாலையின் - குடிநீர் விநியோக மார்க்கங்கள் மறுசீரமைக்கப்படவேண்டும்

## - நிர்வாக அதிகாரி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையின் குடிநீர் விநியோகமார்க்கங்கள் முற்றுமுழுதாக மறுசீரமைக்கப்படவேண்டிய தேவைப்பாடுள்ளதாக யாழ்.போதனாவைத்தியசாலையின் நிர்வாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

யாழ். போதனாவைத்தியசாலையில் தற்போதுள்ள குடிநீர் விநியோகமார்க்கங்களும் இதில் பொருத்தப்பட்டுள்ள நீர் விநியோக குழாய்களும் பல தசாப்தங்களுக்கு முற்பட்டவை இவை வைத்தியசாலையின் ஆரம்ப காலத்திலேயே அமைக்கப்பட்டவை என்பதால் இக்குடிநீர் விநியோகமார்க்கங்களில் பலகுறைபாடுகள் உள்ளன.

குறிப்பாக தற்போதுள்ள யாழ். போதனாவைத்தியசாலையின் தேவைப்பாடுகள், அதன் அமைப்பு முறைகள் என்பனவற்றிற்கேற்ப இவைகாணப்படவில்லை. இதனால் இவ் வைத்தியசாலையின் குடிநீர் விநியோக நடவடிக்கைகளில் பாதிப்பு ஏற்பட்டிருப்பதாக தெரிவிக்கும் நிர்வாக அதிகாரிகள்,

நீர் விரயத்தைத் தவிர்த்து தேவைக்கேற்ற பயன்பாட்டை தரும் விதத்தில் இந்நீர் விநியோக மார்க்கங்கள் மறுசீரமைக்கப்பட வேண்டுமெனவும் தெரிவித்துள்ளனர். (33)

# யாழ்.குடாநாட்டு முந்திரிகைச் செய்கை உயர்பாதுகாப்பு வலயத்தால் தொடர்ந்து பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் முந்திரிகைப் பயிர்ச் செய்கை தொடர்ந்து பாரிய வீழ்ச்சிகண்டிருப்பதாக யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்களத்தின் விவசாய உத்தியோகத்தர்கள் தெரிவிக்கின்றனர்.

இலங்கையிலேயே மலைநாட்டு முந்திரிகைப்பழத்துக்கு ஈடானதாக யாழ் குடாநாட்டு முந்திரிகைக்கு சந்தை மதிப்புக் காணப்பட்டு வந்தது. இதனால் யாழ்.குடாநாட்டு விவசாயிகளில் அதிகளவானோர் இம்முந்திரிகைப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு வந்தனர்.

யாழ். குடாநாட்டில் குறிப்பாக வலிகாமம் வடக்குப் பகுதியில் இம்முந்திகைப் பயிர்ச் செய்கைக்கு உகந்த சூழல் காணப்பட்டன. இதனால் உற்பத்தியின் அளவும் அப்பகுதிகளிலேயே அதிகம் காணப்பட்டன.

எனினும்வலிகாமம்வடக்கில் உள்ள விளைநிலங்கள் பலவும் இராணுவ அதி உயர் பாதுகாப்புவலயமாக முடக்கப்பட்டிருப்பதாலும் ஏனைய பகுதிகளில் இருந்த முந்திரிகைச் செய்கைக்கு உகந்த விளைநிலங்களில் படையினர் கண்ணிவெடிகளைப் புதைத்து வைத்திருப்பதினாலும் யாழ்.குடாநாட்டின் முந்திரிகைச் செய்கை பாரிய வீழ்ச்சி கண்டுள்ளதாக அவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர். (33)

# வாகனப் பற்றாக்குறையால் சாவகச்சேரி நகரசபை நெருக்கடியில்

(தென்மராட்சி)

சாவகச்சேரி நகரத்தில் குப்பைகளை அகற்றுவதற்கும் குடிநீரை வழங்குவதற்கும் வாகனங்கள், பற்றாக்குறையால் தாம் பெரும் சிக்கலை எதிர்நோக்கி இருப்பதாக நகரசபைத் தலைவர் தெரிவிக்கின்றார்.

குப்பைகளை அகற்றுவதற்குஇரண்டு பெரிய உழவு இயந்திரங்களும் மற்றும் தண்ணீர் பவுசர் ஒன்றும் தருவதாக உறுதியளித்தவர்கள், வாக்குறுதி களை வாரி இறைத்தவர்கள், பத்திரிகைகளில் விளம்பரம் செய்தவர்கள் தற்போது இவற்றை மறந்துவிட்டதாகவும் பேப்பரிலும் பேச்சிலும் தான் இவை நடந்திருப்பதாகவும் இவற்றைத் தருவதாக உறுதியளித்தவர்கள் இவற்றை வழங்கினால் இப்பிரதேசத்திற்கு பயனுள்ளதாக அமையும் என்றும் சாவகச்சேரி நகரசபை தலைவர் தெரிவித்துள்ளார். (28)

# பெற்றோரால் தவறிவிடப்பட்ட நான்கு வயது ஆண்குழந்தை கைதடி அரசியல்துறையால் மீட்பு

(தென்மராட்சி)

கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பெற்றோருடன் சென்று கொண்டிருந்த நான்குவயது சிறுவன் தவறவிடப்பட்டு கைதடி அரசியல்துறையினரால் மீட்கப்பட்டு பெற்றோரிடம் ஒப்படைக் கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது

கிளிநொச்சியில் இருந்து பெற்றோருடன் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்து கொண்டிருந்த நான்கு வயது ஆண்குழந்தையொன்று இடைநடுவில் தவறுதலாக கைதடிப் பகுதியில் இறங்கியவர்களுடன் சேர்ந்து இறங்கிவிட்டதாக தெரியவருகிறது இதைக் கவனிக்காத பெற்றோரும் யாழ்ப்பாணம் சென்று பேருந்தை விட்டு இறங்குகின்ற பொழுது தமது நான்கு வயது ஆண்குழந்தையைக் காணாமல் அதிர்ச்சியடைந்துள்ளனர். கண்ணீருடன் குழந்தையை கோப்பாய் கைதடி சாவகச்சேரி என பல்வேறு இடங்களில் தேடியுள்ளனர். இதனை கேள்வியுற்ற கைதடிப் பிரதேச அரசியல்துறைப்பொறுப்பாளர் பஞ்சலிங்கம் உடனடியாக செயற்பட்டு இப்பிரதேசம் எங்கும் விசாரணைகளை மேற்கொண்டு காணாமல்போன குழந்தையை மீட்டுள்ளார். உடனடியாக பெற்றோர்களுக்கு அறிவிக்கப்பட்டு குழந்தை பெற்றோர்களிடம் பத்திரமாய் ஒப்படைக்கப்பட்டது. கண்ணீருடன் குழந்தையைத் தேடியவர்கள் தமது நன்றியை அரசியல்துறைக்கு தெரித்துள்ளனர். (28)

# நெடுந்தீவு வெட்டுக்கழிக்குளம் த.பொ.மே. நிறுவனத்தால் புனரமைப்பு

நியாப்திட்டத்தின் கீழ் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் உதவியுடன் நெடுந்தீவிலுள்ள வெட்டுக் கழிக்குளம் ஆழப் படுத்தப்பட்டு புனரமைப்பு செய்யப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இக்குளம் புனரமைப்பு செய்யப்பட்டதன்மூலம் ஒவ்வொருஆண்டும் குறிப்பிட்ட இப்பகுதியில் எழும்பும் சூழல் புழுதி,குளம் புனரமைக்கப்பட்டு நீர்தேக்கப்படுவதன், மூலம் தடுக்கப்படும் என்றும் இச்சூழல் புழுதி காலங்களில் மக்கள் இப்பகுதியைவிட்டுதற்காலிகமாக இடம்பெயரும் நிலை குளத்தில் நீர் சேகரிப்பதன்மூலம் தடுக்கப்படும் என்றும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பிரதிநிதி தெரிவித்துள்ளார். (28).

# மாமன் மருமகனால் அடித்துக்கொலை

## - மாதகலில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாதகல் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் மண் வெட்டியால் அடித்துக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் மாதகல் அரசடிப் பிள்ளையார் கோவிலடியில் இடம் பெற்ற இக் கொலைச் சம்பவத்தில்அதே இடத்தைச் சேர்ந்த தாமோதரம் முருகேசு (வயது-67) என்பவரே கொல்லப்பட்டவராவார்.

பிரஸ்தாப குடும்பதஸ்ருக்கும் அவருடைய மருமகனுக்கும் இடையில் இடம் பெற்ற கைகலப்பின் போதே இவரை மருமகன் மண் வெட்டியொன்றால் அடித்துக் கொன்றிருப்பதாகவும் இவ்விருவருக்குமிடையே இடம் பெற்ற கைகலப்பில் தலையிட்ட முருகேசுவின் மகன் அரவிந்த் (வயது-22)என்பவரும் மண்வெட்டித் தாக்குதலுக்கு இலக்காகி யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது. (33)

# மந்திகை வைத்தியசாலைக்கு 26 வைத்தியர் தேவை இருப்பதோ ஆறு வைத்தியர் மட்டுமே

(யாழ்ப்பாணம்)

யாழ். வடமராட்சியில் உள்ள மந்திகை வைத்தியசாலையில் வைத்தியர்கள் பற்றாக் குறையாகக் காணப்படுவதாக மந்திகை வைத்திய சாலையின் மாவட்ட வைத்திய அதிகாரி எஸ் கதிரவேற்பிள்ளை தெரிவித்துள்ளார்.

இவ்வைத்தியசாலை மூலமாக மக்களிற்கு திருப்திகரமான சேவைகளை வழங்குவதற்கு மந்திகை வைத்தியசாலைக் கென 26 வைத்தியர்கள் நியமிக்கப்பட வேண்டிய தேவைப்பாடு உள்ளது.

எனினும் இங்கு தற்பொழுது ஆறு வைத்தியர்களே கடமையாற்றி வருகின்றனர் இவ் ஆறு வைத்தியர்களையும் பயன்படுத்தி மக்களுக்கான திருப்திகரமான வைத்தியச் சேவைகளை வழங்குவதில் பெரும் இடர் பாடுகள் காணப்படுவதாகச்சுட்டிக் காட்டியுள்ள மாவட்ட வைத்திய அதிகாரி எஸ் கதிரவேற்பிள்ளை எஞ்சி இருக்கும் 20 வைத்தியர் வெற்றிடங்கள் உடன் நிரப்பப்பட வேண்டிய தேவை இருப்பதாக வலியுறுத்தியுள்ளார். (33)

# படையினர் பனை மரங்களை அழிக்கின்றனர் கீரிமலை மக்கள் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

கீரிமலை, கரும்பானைப் பகுதிகளில் நிலைகொண்டுள்ள சிறிலங்காப்படைகள் இப்பகுதிகளில் இருந்து ஏராளமான பனை மரங்களைத் தறித்து அழித்து வருவதாக இப் பிரதேச மக்களால் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இப்பகுதியில் படை முகாம்களைப் பலப்படுத்தும் நடவடிக்கைகளை படையினர் தீவிரப்படுத்தியிருப்பதாகவும் சுனாமிக்குப் பிறகு தற்பொழுதே படைமுகாம்களை பலப்படுத்தும் செயற்பாடுகளில் படைத் தரப்பு தீவிரம் காட்டி வருவதால் ஏராளமான பனை மரங்கள் அழிக்கப்பட்டு வருவதாகவும் இவற்றை உடனடியாகத் தடுத்து நிறுத்தும்படி இப்பகுதி மக்கள் கோரியுள்ளனர். (28)

# உணவுப் பொருட்கள் வந்து சேராததால் சத்துணவு வழங்கல் நிறுத்தம்

(தென்மராட்சி)

தென்மராட்சிப்பிரதேசத்தில் உலக உணவுத்திட்டத்தின் கீழ் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டு வந்த சத்துணவுப்பொருட்கள் வழங்கப்படாமையால் கடந்த ஒருவாரமாக இடைநிறுத்தப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

மாணவர்களின் நன்மை கருதி செயற்படுத்தப்பட்ட இத்திட்டம் உணவுப்பொருட்களை கொண்டு வருவதில் ஏற்பட்டுள்ள தடங்கலினால் கடந்த ஒருவாரமாக மாணவர்களுக்கு உணவு வழங்க முடியாத நிலை இருப்பதாகவும் சம்பந்தப்பட்டவர்கள் இதில் கவனம் செலுத்தும்படி தெரிவிக்கப்பட்டுள்ளது (28)




# பொதுக்கட்டமைப்பா? பொதுத் தேர்தலா? -ஆட்சியாளரின் நிலை?

சுனாமியினால் பாதிப்புற்ற வடக்குக் கிழக்கு மாகாணங் களின் புனரமைப்பு, மீள் குடியமர்வு தொடர்பான நடவடிக்கைகளில் அரசுக்கும் விடுதலைப்புலிகளிற்கும் இடையில் பொதுக்கட்ட மைப்பு ஒப்பந்தம் ஒன்றைக் கைச்சாத்திடுவது தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினை பாரிய அரசியல் விவகாரமாக உருவெடுத்திருக்கின்றது.

பொதுக்கட்டமைப்பும், அதற்கு அடிக்கடி ஏற்பட்டுள்ள எதிர்ப்பும் பாரிய பிரச்சினையாகியுள்ளது. சந்திரிகா அரசுக்குள் இருக்கும் இரு பிரதான கட்சிகளிடையே ஏற்பட்டுள்ள வாதவிவாதங்கள் சில தொலைக்காட்சி மூலமாகவும் அறியக்கூடியனவாகவுள்ளது.

விடுதலைப்புலிகளிடம் இந்தப் பொதுக்கட்டமைப்பை வழங்க வேண்டுமா? இல்லையா? என்பதே மேற்படி விவாதமாகும். இந்தப் பொதுக்கட்டமைப்பில் அடங்கியுள்ள விடயங்கள் பற்றி இதுவரை பொதுமக்களுக்கு அறிவிக்கப்படவில்லை. எனினும் சமாதானச் செயலகத்தின் செயலாளரான ஜயந்ததனபால விடமிருந்து கிடைத்திருக்கும் தகவல்களின்படி இந்தப் பொதுக்கட்டமைப்பு என்ன? அதில் அடங்கியிருப்பவை எவை? என்பது பற்றி மக்கள் ஓரளவு உணர்ந் திருக்கின்றனர். சிலவேளை தொலைகாட்சியை அவதானித்து இது பற்றிச் சிலர் ஆச்சரியம் அடையலாம். ஆயினும் யானையைப் பார்த்த குருடனின் கதைபோல ஒவ்வொருவரும் ஒவ்வொன்றைப் பற்றியறி கிறார்களே ஒழிய யானையின் முழு உருவத்தையும் பார்ப்பதுபோல பொதுக் கட்டமைப்புப் பற்றி முழுமையாக விளங்கிக் கொள்ளாதவர்களாகவே உள்ளனர்.

90 வீதமான விடயங்கள் முடிவுக்கு வந்தபோதும் அரசாங்கம் த விடயம் கைச்சாத்தி ளுக்கு பகி த நிறுத்தி

ஒருபக்கம் இந்தப் பொதுக் கட்டமைப்பு விவகாரம் இழுபறிபடும் நிலை இருப்பதால் சுனாமிப் பாதிப்புக்குள்ளான அனைத்துப் பிரதேசங்களிலும் புனரமைப்பு மீள்குடியேற்றப் பணிகளின் ஆரம்ப கட்டப் பணிகள் கூட தடைப்பட்டுப் போயுள்ளது. பெரும்பாலான மக்கள் அரசாங்கத்தினால் தாம் மறக்கப்பட்டிருப்பதாகக் கருதுகின்றனர். இதற்குக் காரணம் பொதுக்கட்டமைப்பு விவகாரத்தில் சந்திரிகாவும் ஜே.வி.பியினரும் ஒரு உடன்பாட்டுக்கு வராமல் இருப்பதாகும். சந்திரிகாவின் கட்சி உறுப்பினர்கள் இதற்கு ஆதரவு தெரிவிப்பதால் ஜே.வி.பி பற்றி தனக்கு அக்கறை இல்லை என்றும், தான் இந்தப் பொதுக் கட்டமைப்பு உடன்பாட்டில் கைச்சாத்திடுவேன் எனவும் சந்திரிகா சூளுரைத்துள்ளார். எனினும் ஜே.வி.பி.யின் தலைமைத்துவம் வெளிநாட்ட மைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரிடம் ஏற்கனவே அரசின் சமாதானநடவடிக்கைகளில் இடையூறு செய்வதில்லை என உறுதியளித்துள்ளது.

சந்திரிகாவும் பொதுக்கட்டமைப்பில் கடுமையான நிலைப்பாட்டில்தான் இதனை முன்னெடுத்துச் செல்வதாகக் கூறுகின்றார். இது ஜே.வி.பி யினருக்கு பெரும் சங்கடத்தை ஏற்படுத்துகின்றது. கடந்த பல வருடங்களாக விடுதலைப்புலிகளுடன் செய்து கொள்ளப்பட்ட சமாதான உடன் படிக்கையை எதிர்த்து வந்த நிலையில் தற்போது தளர்வுப் போக்கைக் கடைப்பிடிப்பது இயலாத காரியமாகியுள்ளது ஜேவிபி சமா தானத்தை விரும் பாது விட்டால் கூட்டரசாங்கத்தில் இருந்து விலகிக் கொள்ளலாம் என்று சந்திரிகாவும் அடிக்கடி கூறி வந்துள்ளார். இதன் காரணமாக பாராளுமன்றைக் கலைக்க நேர்ந்தாலும் தான் தயங்கப் போவ தில்லை என்றும் தெரிவித்தார். இந் நிலையில் ஜே.வி.பி யினர் பொதுத் தேர்தல் ஒன்றைச் சந்திக்கவும் அச்சம்

கொண்டுள்ளனர் காரணம் சந்திரிகா கூட்டணி அரசுக்குள் ஜே.வி.பி. செய்யும் நடவடிக்கை களால் மக்கள் கொண்டுள்ள வெறுப்பாகும்.

இந்தப் பின்னணியில் ஜே.வி.பியினர் பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக தமது பிரேரணையை முன்வைத்துள்ளனர். அது சுனாமி நிவாரணப் பணிகளுக்கான தேசியக் குழு அமைக்கும் யோசனை யாகும் இது ஒரு பக்கச்சார்பானது என்பதை சனாதிபதி உணர்ந்து அதனை நிராகரித் திருப்பதாகவும், இது தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் புதிதாகப் பேச்சுக்களை ஆரம்பிக்கத் தயாரில்லை என்றும் தெரிவித்துள்ளார். இந்த நிலையில் ஜே.வி.பி. அரசுடன் ஒட்டிக்கொண்டு பொதுக்கட்டமைப்புடன் ஒத்துப் போவதா? அல்லது எதிர்ப்பை தெரிவித்து அதன்மூலம் பாராளு மன்றம் கலைக்கப்பட்டு மீண்டும் ஒரு தேர்தலைச் சந்திப்பதா? என்ற இக்கட்டான நிலைக்குத் தள்ளப் பட்டிருக்கின்றது.

இதனிடையே ஜே.வி.பி யின் முக்கிய உறுப்பினர்கள் சிலர் ராஜதந்திர பயணமாக ஜப்பானுக்குப் புறப்பட்டனர். இவர்கள் ஜப்பானுக்குச் செல்லும் முன்பு விமான நிலையத்தில் இவர்களைச் சந்தித்துப் பேட்டிகாண பல தனியார் தொலைக்காட்சி ஊடகவியலாளர்கள் காவல் இருந்தனர். இந்தக் குழுவில் ஜே.வி.பி யின் அமைச்சரல்லாத விமல்வீரவன்ச, நந்தன குணதிலக்க சோமவன்ச அமரசிங்க ஆகியோர் இருந்தனர். இவர்களின் பயணத்தில் பல சந்தேகங்கள் எழுந்தன.

இது ஒரு கல்விச்சுற்றுலா எனக் கூறப்பட்டது. எனினும் இந்தக் குழுவினருக்கு ராஜதந்திரவிசா வழங்கப்பட்டிருப்பினும் சோமவன்ச அமரசிங்கவுக்கு மட்டும் சாதாரண விசாவே வழங்கப்பட்டுள்ளது. இவர்களைப் பேட்டிகாணச் சென்ற போது தம்மைப் புகைப்படம் எடுக்க வேண்டாமென விமல் வீரவன்சவும் நந்தன குணதிலக்கவும் கேட்டுக்கொண்டனர். காரணம் இது வேறுவிதமான பிரச்சினைகளை ஏற்படுத்தும் என்பதும் தமக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் என்பதாகும்.

இரண்டு வாரங்களுக்கு முன்பு அநுரகுமாரதிஸாநாயக்க வியாபார நோக்கமாக சீனா சென்ற போது ஐ.தே.க. எம்.பி ரவிகருணாநாயக்க பாராளு மன்றில் கேள்வியெழுப்பிய தையும் ஜே.வி.பி யினர் மறந்திருக்க மாட்டார்கள். ஜே.வி.பி குழுவினரின் ஜப்பான் பயணத்தின் போது சமாதானச் செயலர் ஜயந்த தனபாலவும் வேறு அலுவலாகச் சென்றார். இவர்கள் விமான நிலையத்தில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் சோத னையை முடித்துக் கொண்டு உள்ளே சென்று ஆவணப் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டனர். அப்போது சோமவன்சவின் கடவுச்சீட்டை கணினி மூலம் பரிசோதித்த போது கணினி அதனை ஏற்றுக் கொள்ள மறுத்து எச்சரிக்கை ஒலியை எழுப்பியதுடன் சம்பந்தப்பட்டவர் காவலில் வைக்கப்படவேண்டும் என்றும் குறிப்பிட்டது. இதனால் கலவரமடைந்த அதிகாரி என்ன செய்வதென்று தெரியாது அவதியுற்றார். ஜயந்ததனபாலவும் அப்போது அருகில் இருந்தார். அவரும் என்ன செய்வதென்று தெரியாமலிருந்தார். விமல் வீரவன்ச உடன் தனது நண்பரான மங்கள சமரவீரவுடன் தொடர்பு கொண்டு உதவி தேடினார். அவரின் உதவியுடன் நிலைமை சீர் செய்யப்பட்டு பயணம் தொடர்ந்தது. எனினும் சோமவன்ச அமரசிங்க இந்த விடயத்தில் சட்டத்திற்கும், நீதிக்கும் முரண்படும் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றாரா என எண்ணத் தோற்றுகின்றது.

இது ஒரு புறமிருக்க சில முக்கிய அமைச்சர்கள் பொதுக் கட்டமைப்பு விவகாரத்தில் சந்திரிகாவும், ஜே.வி. பியினரும் கொண்டுள்ள முரண்பாடுகளைப் போக்கும் தீவிர முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றனர். இதில் தோட்டக் கைத்தொழில் அமைச்சர் பிரியதர்சன யாப்பா முக்கிய பங்கெடுத்துள்ளார். அவரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் ஒரு கலந்துரையாடலும் நடைபெற்றுள்ளது. இதன்போது கூட்டரசாங்கத்தில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் பற்றிய அறிக்கையும் சனாதிபதியிடம் கையளிக்கவென சந்திப்பின் பின் எடுத்துச் செல்லப்பட்டது. இந்த இரு பிரிவினரிடமும் ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் பற்றி மேலும் ஒரு சந்திப்பை ஏற்படுத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது. அதுபோல மீண்டும் நிகழ்ந்த சந்திப்பின்போது முன்னர் சமுகமளித்தவர்களில் அநேகமானோர் வருகை தராமல் விட்டனர். அதற்கு அவர்கள் ஜனக பண்டாரதென்னக்கோனின் நிகழ்வொன்றில் கலந்து கொள்ள விருப்பதை காரணமாகக் கூறினர்.

இந்தச் சந்திப்புக்கு சனாதிபதியின் முன்னாள் இணைச் செயலாளரும், பிரதியமைச்சருமான வசந்த அழகிய வண்ண என்பவரும் சமுகமளித்தார். இதற்கு சிறிபதி சூரியாராச்சி. தலைமை தாங்குவார் என இருந்த போதும் பின்னர் அது மாற்றப்பட் டது

இந்த சந்திப்பின் முக்கிய பணியாக சந்திரிகாவுக்கும் ஜே.வி.பியினருக்குமிடையில் தோன்றியுள்ள இழுபறியைத் தீர்ப்பதாகவே காணப்பட்டது. சிறிலங்கா அரசியலில் இவ்வாறான நிலை ஏற் பட்டிருக்கும் வேளை அதனைக் காணும் பாக்கியத்தை இழந்த வராகக் காணப்படுபவர் ஐ.தே. கட்சியின் முக்கிய உறுப்பினர் எஸ்.பி திஸாநாயக்கவாகும். அவர் விடுதலை பெற எடுத்த இறுதி முயற்சியும் பலனற்றுப் போய் அவரது

**கேசர அபேகேசரவர்தன**
**(டெய்லி மிரர்)**
**தமிழில் வடிவேல்**

பாராளுமன்ற உறுப் புரிமையும் இழக்கப் பட்டுள்ளது.

எனினும் மீண்டும் ஒரு முறை மிலிந்த மொறகொடமூலம் சனாதிபதியிடம் தனது விடுதலை தொடர்பாகப் பேசுவதற்கு எஸ்.பி எண்ணியுள்ளார். அதற்கும் இன்னும் சிலவாரங்கள் எடுக்கலாம். இது தொடர்பில் சனாதிபதியின் முடிவு எவ்வாறு இருக்கும் என்பது விரைவில் தெரியும்.




**19.05.2005-25.05.2005**

**19.**

➡ இந்தோனேஷியாவின் சுமாத்திராத்தீவில் பூமியதிர்ச்சி ஏற்பட்டது. இது ரிச்டர் அளவுகோலில் 6.3 புள்ளியாகப் பதிவானது.

➡ பலஸ்தீன அதிபர் மகமுத் அப்பாஸ் இரண்டு நாள் விஜயமாக இந்தியா சென்றார்.

➡ ஆந்திரா மாநிலம் சித்தூர்ப் பகுதியில் வெயில் கொடுமையின் காரணமாக ஐந்து பேர் பலி.

➡ இந்தோனேஷியாவின் தலைநகர் ஜகார்த்தாவிற்கு வடகிழக்கே சுமார் 250 கிலோமீற்றர் தொலைவில் பயணிகள் ரயிலொன்று சரக்கு ரயிலுடன் மோதி விபத்துக்குள்ளானதில் ஏழுபேர் பலி.

➡ வடசீனாவில் ஹெபெய் மாகாணத்தில் நிலக்கரிச்சுரங்கமொன்றில் ஏற்பட்ட வாயு வெடிப்பினால் 50 பேர் புதையுண்டனர்.

➡ ஆப்கானிஸ்தானின் தென்காபூல் மாகாணத்தில் அமெரிக்க உதவிநிறுவனமொன்றின்மீது தலிபான் கிளர்ச்சியாளர்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி ஆறு பணியாளர்கள் பலி.

➡ ஈராக்கில் இடம்பெற்ற தாக்குதல்களில் ஈராக் எண்ணெய் அமைச்சு உயரதிகாரி ஒருவர் உட்பட 24 பேர் கொல்லப்பட்டனர்.




**20.**

➡ ஈராக்தலைநகர் பாக்தாத்தில் சியா முஸ்லிம் பள்ளிவாசலில் இடம்பெற்ற கார்க்குண்டுத் தாக்குதலில் பலர் படுகாயம்.



➡ தமிழகத்தில் கன்னியாகுமரி மாவட்டத்திலும், கேரளாவிலும் கடல் ஆர்ப்பரித்ததில் கடலோரக் கிராமங்கள் பல நீரில் மூழ்கின. நூற்றுக்கனக்கான வீடுகள் அள்ளுண்டன.



**21.**

➡ ஆப்கானில் தென்கிழக்கு மாகாணமான பக்ரிகாவில் அமெரிக்க இராணுவம் நடத்திய தரைமற்றும் விமானத் தாக்குதல்களில் 12 கிளர்ச்சிவாதிகள் பலி; அமெரிக்க இராணுவ வீரர் ஒருவர் காயம்.

**22.**

➡ இந்திய சனாதிபதி அப்துல்கலாம் பதின்நான்கு நாள் விஜயமாக ரஷ்யா, சுவிற்சர்லாந்து, ஐஸ்லாந்து, உக்ரைன் ஆகிய நாடுகளுக்குப் பயணம்.

➡ டில்லியில் இரு திரையரங்குகளில் குண்டு வெடித்ததில் ஒருவர் பலி; 60 பேர் காயம்.



➡ மொங்கோலியாவில் இடம்பெற்ற பொதுத்தேர்தலில் முன்னாள் பிரதமர் நாகூர்யங் 53 சதவீதவாக்குகளைப் பெற்று வெற்றிபெற்றார்.

➡ பெருவின் ஜயூஜா நகருக்கருகில் பயணிகள் பேருந்து ஒன்று பாலத்தில் இருந்து குடைசாய்ந்துஆற்றுக்குள் விழுந்ததில் 35 பேர் பலி.

**23.**

➡ வங்கதேசத்தில் கடும் சூறாவளி வீசியதால் 15 பேர் பலி;நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் காயம்; ஆயிரக்கணக்கான வீடுகள் சேதமடைந்தன.


➡ அமெரிக்காவின் வெள்ளை மாளிகையில் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்சும், ஆப்கானிஸ்தான் அதிபர் ஹமிட்கர்சாய் ஆகிய இருவரும் செய்தியாளர் மாநாடொன்றை நடத்தினர்.

➡ லண்டனில் பி.பி.சி. தொலைக்காட்சி நிறுவனத்தில் ஆட்குறைப்புச் செய்யப்பட்டதைக் கண்டித்து ஊழியர்கள் 24 மணிநேர வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

➡ பீகார் சட்டப் பேரவை கலைக்கப்பட்டது.

➡ ஈராக்கிய அமைச்சரவையின் சிரேஷ்ர ஆலோசகர் வாகில் ருபாயி கடமைக்காகத் தனது காரில் சென்றுகொண்டிருந்தவேளை பாக்தாத்தின் மத்திய பகுதியில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டார்.

➡ இந்தியாவில் திருச்செந்தூர்க் கடலில் 25 அடி தூரத்திற்கு நீர்உள் வாங்கியது.



➡ ஈராக் தலைநகர் பாக்தாத்தில் இடம் பெற்ற இரு கார்க்குண்டுத் தாக்குதல்களில் 30 பேர் பலி.



➡ தமிழக-சென்னையில் தமிழ் தவிர ஏனைய மொழிகளில் இருந்த பெயர்ப் பலகைகளில் கறுப்பு மை பூசி அழித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டபோது ராமதாஸ், திருமாவளவன். பழநெடுமாறன் உட்பட்ட 200 பேரை தமிழகப்பொலிசார் கைது செய்தனர்.

**24.**

➡ ஈராக்கின் தலைநகர் பாக்தாத்திலுள்ள பிரபல பெண்கள் கல்லூரிக்கு அண்மையில் இடம்பெற்ற கார்க்குண்டுத் தாக்குதலில் ஆறுபேர் பலி.

➡ ஈராக்கின் பாக்தாத் அருகேயுள்ள முகபதியா நகரில் அப்துல்பாதல் அட்பாஸ் மசூதிக்கருகே இடம்பெற்ற கார்க்குண்டுத் தாக்குதலில் தொழுகைக்குச் சென்றுகொண்டிருந்த 15 பேர் உடல் சிதறிப் பலி.



➡ தமிழக-சென்னையில் தமிழ் தவிர ஏனைய மொழிகளில் இருந்த பெயர்ப்பலகைகளில் கறுப்பு மை பூசி அழித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டபோது கைது செய்யப்பட்ட ராமதாஸ், திருமாவளவன், பழநெடுமாறன் உட்பட200 பேர் விடுதலை.

➡ மக்கள் சீனக் குடியரசின் இராணுவத்தளபதி லியாங்குயாங்கில் புதுடில்லிக்கு விஜயம்.

**25.**

➡ மத்திய பாக்தாத்தில் இடம்பெற்ற கார்க்குண்டு வெடிப்பில் ஐந்து ஈராக்கியர்கள் பலி.



➡ இந்திய மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரும் புகழ்பெற்ற நடிகருமான சுனில்தத் மாரடைப்பால் மரணம்.

➡ ஈரானின் அணுத்திட்டம் தொடர்பாக மேற்குலகுடன் அது கொண்டிருக்கும் கருத்து முரண்பாட்டைத் தீர்ப்பதற்கான பேச்சுவார்த்தை ஜெனீவாவில் இடம்பெற்றது.

➡ ஐ.நா.வின் சிறப்பு தூதுவரும், முன்னாள் அமெரிக்க சனாதிபதியுமான பில்கிளிங்டன் மூன்று நாள் பயணமாக இந்தியா சென்றார்.

➡ இந்தியாவின் பாரதிய ஜனதாக் கட்சியின் மகளிர் அமைப்புத் தலைவரும், பிரபல நடிகையுமான விஜயசாந்தி அக்கட்சியில் இருந்து விலகினார்.

➡ கொங்கோ ஜனநாயகக்குடியரசின் கிழக்குப் பகுதியில் சுமார் 24 பேருடன் சென்ற பயணிகள் விமானமான அன்ரனோவ் 12 ரக விமானம் காணாமல் போனது.

➡ துருக்கிய அதிகாரிகளால் தீவிரவாத இயக்க சந்தேக நபர்கள் 10 பேர் கைது.

# படையினர் விதிக்கும் தடையை நீக்குமாறு பாதுகாப்பமைச்சின் செயலரிடம் கோரிக்கை

## -போர் நிறுத்த உடன்பாட்டை மீறும் செயல்

(திருமலை)

கட்டைப்பறிச்சான் மற்றும் மஹிந்தபுர இராணுவமுகாம்கள் ஊடாக மூதூர் கிழக்குப்பிரதேசம் மற்றும் ஈச்சிலம்பற்றுப் பிரதேசச் செயலர் பிரிவு ஆகிய பகுதிகளுக்கு சீமெந்து மற்றும் கட்டடப் பொருட்கள் மற்றும் எரிபொருள் , விவசாயப் பொருட்களை எடுத்துச்செல்வதற்கு படையினர் விதித்துள்ள தடையை விலக்கி மக்களுக்கு உதவ நடவடிக்கை எடுக்கும்படி பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் க.துரைரட்ணசிங்கம் கடிதமூலம் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் துரைரட்ணசிங்கம் கடிதத்தில் மேலும் தெரிவித்திருப்பதாவது; புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பின்னர் ,கட்டைப்பறிச்சான் மற்றும் மஹிந்தபுர இராணுவ முகாம்கள் ஊடாக அத்தியாவசியப் பொருட்களைப் பொதுமக்கள் எடுத்துச் செல்வதற்கு கட்டுப்பாடு விதிக்கப்படவில்லை. அண்மைக்காலமாக முன்னறிவித்தல் எதுவுமின்றிப் பொருட்களை எடுத்துச் செல்வதற்கு கட்டுப்பாடு விதிக்கப் பட்டுள்ளது. இது கண்டிக்கத்தக்கது. இதனால் மக்கள் சிரமமடைகிறார்கள்.

யுத்த நிறுத்த உடன்படிக்கை அமுலுக்கு வந்ததை யடுத்து யுத்தம் மற்றும் கடற்கோள் ஆகியவற்றினால் அழிந்துபோன பகுதிகளில் புனர்வாழ்வு மற்றும் புனர்நிர்மாணப் பணிகளில் பல அரச சார்பற்ற நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளன. இவ்வாறான பணிகள் கட்டுப்பாடற்ற பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆனால்கட்டுப்பாடற்ற பகுதிகளில் மேற்கொள்ளப்படும் புனர்வாழ்வு,புனர்நிர்மாணப் பணிகள் சீமெந்து மற்றும் கட்டடப் பொருட்களை கட்டைப்பறிச்சான் மற்றும் மஹிந்தபுர இராணுவமுகாம்கள் ஊடாக எடுத்துச்செல்லவிதிக்கப்பட்ட தடையினால் தாமதமடைந்துள்ளன. இன்னும் இரண்டு மூன்று மாதங்களில் பருவகால மழைபெய்ய ஆரம்பித்துவிட்டால் புனர்வாழ்வு மற்றும் புனர்நிர்மாணப் பணிகள் ஸ்தம்பிதமடைந்துவிடும். பொருளாதாரத் தடைக்குபொதுமக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தும் அதனை நீக்குவதற்கு உருப்படியான நடவடிக்கைகள் அரசதரப்பினால் எடுக்கப்படவில்லை என்றும் பாராளுமன்ற உறுப்பினர் க.துரைரட்ணசிங்கம் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார். (25)

# தபால் விநியோகம் சீரில்லை எதிர்த்து வேலைநிறுத்தப் போராட்டம்

தகவல் தொழில் நுட்பம் வெகுவாக முன்னேறியுள்ள இக்கால கட்டத்திலும் பெருந்தோட்டப்புறங்களை தபால் சேவை முழுமையாகச் சென்றடையாமையை எதிர்த்து தோட்டத்தொழிலாளர்கள் வேலை நிறுத்தப்போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர். தோட்டக் குடியிருப்புகளுக்கே நேரடி தபால் சேவை என கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாகப் பல்வேறு தரப்பினராலும் வாக்குறுதிகள் வழங்கப்பட்டுவரும்போதும் இன்றுவரை அது செயல்வடிவம் பெறவில்லை. தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கை பலனளிக்காத இந்நிலையில் இக்கோரிக்கையை முன்வைத்து தொழிலாளர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடத் தயாராகி உள்ளனர். இதற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகளை டிக்கோயா பொய்ஸ்டன் தோட்டத் தொழிலாளர்கள் மேற்கொண்டு வருகின்றனர். இந்திய வம்சாவழித் தோட்டத் தொழிலாளர்கள் இலங்கைக்கு வந்து குடியேறிய நாள் முதல் இன்றுவரை எந்தவொரு தோட்டக் குடியிருப்புக்கும் நேரடியாக தபால் விநியோகிக்கப்படுவதில்லை. நேரடியான தபால் விநியோகத்துக்காகவே தபால் கட்டணம் செலுத்தப்படுகின்றது. ஆனால் இந்த நடைமுறை தோட்டத்தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் மீறப்படுவது மனிதஉரிமை மீறலாகும். (32)

# தாவர வகைகளை வளர்த்து கரையோரத்தைப் பாதுகாக்க முடிவு

கரையோரப்பாதுகாப்பு வலயத்திற்குள் தேர்ந்தெடுக்கப்பட்ட தாவர வகைகளை வளர்ப்பதற்கு சிறிலங்காவின் கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இந்த வேலைத்திட்டம் பொதுமக்களின் உதவியுடனேயே முன்னெடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.கரையோரப் பகுதிகளைப் பாதுகாக்கும் வகையில் வளர்க்கப்படவுள்ள இந்த விசேட தாவர இனங்கள் இனங்காணப்பட்டுள்ளதாகவும் அந்தத் திணைக்களம் கூறியுள்ளது. கடலரிப்பைத் தடுப்பதற்கும்,பாரிய கடலலைகளிலிருந்து நாட்டைப் பாதுகாப்பதுமே இந்தத் திட்டத்தின் நோக்கம் என கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

# 3 ஆவது பிறந்தநாள் வாழ்த்து

## பவித்திரன் (பவி)




**30-05-2005**

*அச்சுவேலியைச் சேர்ந்த ரவிராஜன்,பளையைச் சேர்ந்த கிருஷ்ணகுமாரி தம்பதிகளின் செல்வப்புதல்வன் பவித்திரன் (பவி) தனது மூன்றாவது பிறந்த நாளை 30.05.2005 இன்று றெட்பானா விசுவமடுவிலுள்ள தனது தற்காலிக இல்லத்தில் சிறப்பாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா,அம்மா, அம்மப்பா, அம்மம்மா, சித்தா,பாட்டி சித்தப்பா மற்றும் யாழ்ப்பாணம், விசுவமடு,கனடா லண்டனில் வசிக்கும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கொட்டடி விநாயகர் அருள்பெற்று, பல்கலையும் பெற்று நீடூழிகாலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.*

தகவல்:-

**அம்மப்பா, அம்மம்மா.**

**றெட்பானா,**
**விசுவமடு.**

(6212)



# 13ஆம் நினைவில்

பிறப்பு
08
-
11
-
1970



வீரச்சாவு
30
-
05
-
1992

## கப்டன் கெனடி/பாவாணன்

### (பத்மநாதன் மயூரன்)

புன்னாலைக்கட்டுவன் தெற்கு

நிழலாகத் தொடர்கின்ற உன் நினைவால்
இருவிழியும் பனித்திடவே இமைமூடி இறைஞ்சுகின்றோம்
மலர்கின்ற தமிழீழத்தில் மகிழ்வுடனே நீ வாழ,
மறுபடியும் பிறந்திடுவாய் எம்முறவுள் ஒரு உயிராய்.

தகவல்:-

**குடும்பத்தார்.**

(6213)


# பொதுக்கட்டமைப்பு அமைக்கப்பட்டால்
# சனாதிபதி தேர்தலில் தனித்துப் போட்டி

**-ஜே.வி.பி முடிவு-**

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் பொதுக் கட்டமைப்பு ஒப்பந்தம் செய்துகொள்ளுமானால் சனாதிபதித் தேர்தலில் தனித்து நின்று போட்டியிடப்போவதாக ஜே.வி.பியின் அரசியல் உயர் பீடம் தெரிவித் துள்ளது.

இக் கூட்டு ஒப்பந்தம் அமுல் படுத்தப்படுமானால் அரசாங்கத்தில் இருந்து விலகப் போவதாகவும் ஜே.வி.பி தீர்மானம் எடுத்துள்ளது.

சனாதிபதி வேட்பாளர் பெயரை தெரிவு செய்வதற்கு ஜே.வி.பி தற்போது நடவடிக்கை எடுத்துள்ளது.

சனாதிபதி தேர்தலை அடுத்த வருடம் நடத்தப் போவதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சி அறிவித்துள்ளது. ஆனால் இதுவரை அவர்கள் வேட்பாளர் பெயரை அறிவிக்கவில்லை எனவும் ஜே.வி.பி குறிப்பிட்டுள்ளது.

# ஜே.வி.பி. யின் மாற்று யோசனையை
# சனாதிபதி சந்திரிகா ஏற்கமாட்டாராம்

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக ஜே.வி.பி யினர்முன்வைத்துள்ள மாற்றுயோசனையை சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஏற்றுக்கொள்ளமாட்டாரெனத் தெரிவிக்கப்படுகிறது.

வடக்குகிழக்கு நிலவரம் குறித்து ஜே.வி.பி யினருக்கு எதுவும் தெரியாதெனக் குறிப்பிட்டுள்ள சனாதிபதி மாளிகை வட்டாரங்கள், எனவே வடக்குகிழக்கு புனர்நிர்மாணத்திற்கான பொதுக்கட்டமைப்பிற்கு ஜே.வி.பி யினர் முன்வைத்துள்ள மாற்றுயோசனையை சனாதிபதி ஏற்றுக்கொள்ளமாட்டாரெனத் தகவல் வெளியிட்டுள்ளது.

கடற்கோள் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழுள்ள பிரதேசங்களிலும் நிவாரண மற்றும் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ளும் நோக்கத்திலேயே விடுதலைப் புலிகளுடன் இணைந்து பொதுக் கட்டமைப்பை உருவாக்க அரசாங்கம் தீர்மானித்தது, எனினும், ஜே.வி.பி யினர் முன்வைத்துள்ள யோசனையில் விடுதலைப் புலிகள் முற்றாகப் புறந்தள்ளப்பட்டுவிட்டதால் இந்த யோசனையை ஒருபோதும் சனாதிபதி ஏற்றுக்கொள்ளமாட்டாரெனத் தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் கிழக்கு மாகாணத்தின் சில பகுதிகள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமென போர் நிறுத்த உடன்பாட்டில் குறிப்பிடப் பட்டிருப்பதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென சனாதிபதி மாளிகை வட்டாரங்கள் மேலும் கூறியுள்ளன.

இதேவேளை,பொதுக்கட்டமைப்பு விடுதலைப்புலிகளுடன் இணைந்து உருவாக்கப்பட்டால் மாத்திரமே உரிய தேவையைப் பூர்த்தி செய்ய முடியுமென தபால்தொலைத் தொடர்பு அமைச்சர் டி.எம். ஜயரட்ண கூறியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# மூன்று பாராளுமன்ற உறுப்பினர் நீக்கல் உத்தரவை
# சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் விலக்கியது

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியிலிருந்து மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களை நீக்கிய உத்தரவை அக் கட்சி நேற்றுமுன்தினம் விலக்கிக் கொண்டுள்ளதாக கொழும்புத் தகவல்கள் கூறுகின்றன.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் மீது பாலியல் புகார் உள்ளிட்ட கடும் குற்றச்சாட்டுக்களை அமீர் அலி, ரிசார்ட் பதியுதீன், நஜிப் மஜித் ஆகியோர் எழுப்பியிருந்தனர். இதனையடுத்து முஸ்லிம் காங்கிரசி லிருந்து மூவரும் நீக்கப்பட்டனர். இவர்கள் தற்போதைய ஆளும் அரசின் அமைச்சர்களாக இருக்கின்றனர். மூவருக்கும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சி அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மூவரும் தெரிவித்திருந்தது போல விளக்கம் அளிப்பதற்கு உரிய கால அவகாசம் அளிக்கவில்லை என்பதை ஏற்று, அவர்களை நீக்கியதாக பிறப்பிக்கப்பட்ட உத்தரவை திரும்பப் பெறுவதாகத் தெரிவித்துள்ளது. இருப்பினும் மூவரின் சார்பில் ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்துள்ள பேச்சாளர் ஒருவர் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியில் நீடிப்பதா? இல்லையா? என்பது குறித்த அடுத்த கட்ட நடவடிக்கைக்காக சிறிது கால அவகாசம் தேவை என்றார்.


# புதூர் ஸ்ரீநாகதம்பிரான் ஆலய பரிபாலன சபை

## அறிவித்தல்

**புதூர் ஸ்ரீ நாகதம்பிரான் ஆலய விநாயகப் பெருமானுக்கு கும்பாபிஷேக நிகழ்வு 01.06.2005 புதன்கிழமை நடைபெறும். அதனைத் தொடர்ந்து 06.06.2005 திங்கட்கிழமை வழமையான வருடாந்த உற்சவதினம் நடைபெறும். ஆலய வீதியில் வாணிபம் செய்வோர் தங்களுக்கான இடங்களை 01ஆம், 02ஆம் திகதிகளில் ஆலய பரிபாலன சபையினருடன்தொடர்பு கொள்ளவும். இவ் ஆலயத்திற்கென வெளியிடங்களில் பணம் தண்டி வருபவர்களுக்கு அடியார்கள் பணம் வழங்க வேண்டாமென ஆலய பரிபாலன சபையினர் தங்களுக்கு அறியத் தருகின்றோம்**

"நன்றி"

இ.பூலோகசிங்கம்.
செயலாளர்,
புதூர் ஸ்ரீநாகதம்பிரான் ஆலய
பரிபாலனசபை, புதூர்.

(சி.11971)



# VDP, VADP அறிக்கை தயாரிப்பு பட்டறை நியாப்-II
# முல்லைத்தீவு மாவட்டம்

*வைகாசிமாதம் முழுவதும் நடைபெற்ற PRA/PNA தாயாரிப்புச் செயற்பாடுகளின் தொடர்ச்சியாக VDP/VADP தயாரிப்புக்கான பட்டறைகள் கீழ்வரும் அட்டவணைப்படி நியாப் மாவட்டத்திட்டப்பணிமனை, நிர்ப்பாசன வளாகம் ஒட்டுசுட்டானில் , காலை 8. 30 மணியிலிருந்து நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. எனவே தயவுசெய்து சகல CST/TST குழு உறுப்பினர்களும், தமிழீழ விடுதலைப்புலிகளின் சகல அமைப்புக்களினதும் பிரதேச மட்ட பிரதிநிதிகளும் தங்களின் தனிப்பட்ட பிரசன்னத்தின்மூலம் இவ்வறிக்கைகளைத் தயாரித்து உங்கள் பிரதேசத்திற்குரியவற்றை பட்டறையின் இரண்டாம் நாள் இறுதியாக்கி சமர்ப்பிக்கும் வண்ணம் தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.*

| | | |
|---|---|---|
| 01) | மாந்தை கிழக்கு | - 02,03/06/2005 |
| 02) | துணுக்காய் | - 06,07/06/2005 |
| 03) | ஒட்டுசுட்டான் | - 09,10/06/2005 |
| 04) | புதுக்குடியிருப பு | - 13,14/06/2005 |
| 05) | கரைதுறைப்பற்று | - 16,17/06/2005. |

*இதற்காகத் தூரத் இடங்களில் இருந்து வருபவர்கட்கு 2,6,9,13,16 ஆகிய தினங்களில் தங்குவதற்கும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதால் தயவுசெய்து அதற்கான ஆயத்தத்துடன் வந்து இச்செயற்பாடுகளை துரிதமாக நிறைவேற்றித் தரும்வண்ணம் தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.*


**எந்திரி ச.சு.சிவகுமார்,**
**பிரதித்திட்டப்பணிப்பாளர்,**
**நியாப் -முல்லைத்தீவு.**

(சி-12021)

# புதிய கட்டடம் இடிந்து விழுந்து திருச்சியில் 20 பேர் நசுங்கிப் பலி

(சென்னை)

தமிழகம் திருச்சி அருகே கட்டப்பட்டுக் கொண்டிருந்த கட்டடம் இடிந்து வீழ்ந்ததில் சுமார் 20 பேர் வரை கொல்லப்பட்டு மற்றும் 17பேர் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இச்சம்பவம் பற்றித்தெரியவருவதாவது;



நேற்று முன்தினம் பக்கச் சுவர் அமைப்பதற்கு கொங்கிரீட் போடப்பட்டுக்கொண்டிருந்தது. அப்போது மதியம் சுமார் ஒரு மணி அளவில் கடந்த 15 நாட்களுக்கு முன்பு அமைக்கப்பட்டிருந்த 40 அடி நீளம் உள்ள கொங்கிரீட் தளம் 40 அடி உயரத்திலிருந்து கீழே விழுந்தது. இதில் அதன் மேல் நின்று வேலை செய்துகொண்டிருந்த கட்டடத்தொழிலாளர்களும் கீழே விழுந்தனர். அப்போது கட்டடப் பணியில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்கள் மீது கொங்கிரீட் தளமும் அதைத் தாங்கிப் பிடிப்பதற்காக அமைக்கப்பட்டிருந்த தகடுகளும் மேலே விழுந்து அமுக்கியது.

இதனால் இடிபாடுகளுக்குள் சிக்கிய தொழிலாளர்கள் வெளியே வரமுடியாமல் சிக்கித் தவித்தனர். கட்டடம் சரிந்து விழுந்த சத்தம் கேட்டு அக்கம் பக்கத்தில் வேலை செய்து கொண்டிருந்தவர்களும் தொழிற்சாலைகளுக்குள் பணி புரிந்து கொண்டிருந்த தொழிலாளர் களும் ஓடிவந்து இடிபாடுகளுக்குள் சிக்கிக் கொண்டவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டனர்.

இக்கோர அனர்த்தத்தின் போது 20 தொழிலாளர்கள் அவ்விடத்திலேயே நசுங்கிப் பலியாகினர். மேலும 17தொழிலாளர்கள் ஆபத்தான நிலையில் மருத்துவமனைகளில் சிகிச்சை பெறுகின்றனர்.

# சுவிஸ் அதிபர் ஸ்கிமிட் இந். சனாதிபதி சந்திப்பு

சனாதிபதி அப்துல்கலாம் சுவிற்சர்லாந்து நாட்டில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு கடந்த வெள்ளியன்று அந்நாட்டு அதிபர் சாமுவேல் ஸ்கிமிட்டைச் சந்தித்துப் பேசினார். அப்போது உலக இளைஞர்களை ஒருங்கிணைந்த செயற்கைக்கோள் திட்டத்தைச் செயற்படுத்துவது குறித்து சனாதிபதி கலாம் சுவிற்சர்லாந்து அதிபருடன் ஆலோசித்தார். முன்னதாக இதே திட்டம் குறித்து ரஷ்ய அதிபர் புட்டினுடனும் சனாதிபதி கலாம் ஆலோசனை நடத்தினார். இந்தத் திட்டத்தின் மூலம் இந்திய இளைஞர்கள் உலகளாவிய அறிவைப் பெறமுடியும் என்று சனாதிபதி கலாம் நம்பிக்கை தெரிவித்துள்ளார். மேலும் இந்திய செயற்கைக்கோள் கார்டோசாட் அனுப்பிய சுவிற்சர்லாந்தின் ஆல்ப்ஸ் மலை படங்கள் அடங்கிய சீ.டியை சுவிற்சர்லாந்து அதிபரிடம் சனாதிபதி கலாம் அளித்தார். அதைப் பார்த்து வியந்த சுவிற்சர்லாந்து அதிபர் சனாதிபதி கலாமிடம் பாராட்டுத் தெரிவித்தார். இதன் பின்னர் விஞ்ஞானி ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் வாழ்ந்த வீட்டைக் கலாம் சுற்றிப் பார்த்தார். ஐன்ஸ்டீனின் வாழ்க்கை வரலாறு அறிவியல் ஆய்வுகள் ஆகியவற்றைப் பார்த்து வியப்புற்றார்.



சுவிறசர்லாந்து சென்றுள்ள கலாம் அந்நாட்டின் புகழபெற்ற சுற்றுலாத் தளமான ஈஸ்டர்வாட் படகுத்துறையில் சுவிஸ் அதிபர் ஸ்கிமிட்டைப் புகைப்படம் எடுத்தார்,

# ஆய்வு மேற்கொள்ளச் செல்லும் உறுப்பினர்கள் ஆடம்பரம் அனுபவிக்கத் தடை

பொதுமக்கள் மற்றும் விவசாயிகளிடம் குறை கேட்பதற்காக இந்திய பாராளுமன்றத்தில் 16 குழுக்கள் உள்ளன. பாராளுமன்ற மேல்சபையில் எட்டுக் குழுக்கள் இருக்கின்றன. இந்தக்குழுக்கள் ஒவ்வொன்றிலும் தலா 30 உறுப்பினர்கள் இடம்பெற்றுள்ளனர்.

இந்தக் குழுவினர் பல மாநிலங்களுக்குச் சென்று மக்களிடம் குறைகேட்பது உண்டு. ஆனால் எதுவும் நடக்காது அதே சமயத்தில் ஆய்வுக்குழுபயணம் என்ற பெயரில் சட்டமன்றஉறுப்பினர்கள் பல சலுகைகளை அனுபவிப்பார்கள்.

ஆய்வு நடத்தச் செல்லும்போது மனைவி, குழந்தைகளை உடன் அழைத்துச் செல்வார்கள். குளிரூட்டப்பட்ட அறை, கார் என்ற எல்லாப் பலன்களையும் பெறுவார்கள். இத்தகைய பயணத்தால் நிறையப் பணம் வீணாகச் செலவழிக்கப் படுவதாக் குற்றம்சாட்டப்பட்டது. பாராளுமன்ற சபாநாயகர் சோம்நாத் சட்டர்ஜியின் கவனத்திற்கும் இது கொண்டு செல்லப்பட்டது. உடனடியாக அவர் உறுப்பினர்கள் குழு பயணத்திற்கு கிடுக்கிப்பிடியாக சில தடைகளைப் போட்டுள்ளார்.

ஆய்வு நடத்தச் செல்லும்போது தங்கள் குடும்பத்தினரை அழைத்து செல்லக்கூடாது. ஏ.சி. வசதி அறைகளை ஒருங்கிணைந்து பயன்படுத்த வேண்டும். ஆடம்பர விடுதிகளில் தங்கக்கூடாது.

ஆய்வு நடத்தும் நாட்களில் தனியார் நிகழ்ச்சிகளில் பங்கேற்கக் கூடாது. பரிசுப்பொருட்கள் எதுவும் வாங்கக் கூடாது என்பது உட்படப் பல தடை உத்தரவுகள் போடப்பட்டன.


## ஓராண்டு இதய அஞ்சலி

மலர்வு 1952 11 08



மறைவு 2004 06 10

நினைவு நாள் 30. 05. 2005

அமரர்

## ஆசீர்வாதம் கிருஷ்ணன்

எம் வாழ்வின் ஒளி விளக்கே
அணையாத அகல் விளக்கே
ஆண்டுகள் ஒன்று ஆனாலும்
அப்பா ஆறுமோ உங்கள் துயரம்
எத்தனை உறவுகள் எம்மைச்
சூழ்ந்திருந்தாலும் நித்தமும் – உன்நினைவு
அப்பா எம் முன்னே உம் முகம்
உயிரோடு ஒளிந்த எம் நெஞ்சம்
உயரவே பறக்கும் எம் வாழ்வில்
துயரத்தை மறக்குமா அல்லது
உங்கள் நினைவுகள் நின்நினைவைச்
சுமந்து நிற்கும்.

(சி.12023)

கிருஷ்ணகுமாரி
தருமபுரம்
10ஆம் யூனிட்

தகவல்: மகன்,மகள்
குமாரி,தீபன்,செல்வி,கோமதி


# பீகாரில் ஒரே கட்டமாக தேர்தல் நடத்த முடிவு

(பீகார்)

பீகாரில் நவம்பர் 15ஆம் திகதி ஒரேகட்டமாக சட்டசபைத் தேர்தலை நடத்த தலைமைத் தேர்தல் ஆணையகம் சிபார்சுசெய்துள்ளது.

பீகாரில் தற்போது ஆளுநர் பூடாசிங் தலைமையில் சனாதிபதி ஆட்சி நடக்கிறது. பீகார் சட்டசபை கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து அங்கு மீண்டும் தேர்தல் நடக்கவிருக்கிறது.

பீகாரில் எப்போது தேர்தல் நடத்தலாம் என்பதைக் கண்டறிவதற்காக தலைமை தேர்தல் ஆணையகம் தனது துணைத் தேர்தல் ஆணையர் அடங்கிய குழுவை பீகாருக்கு அனுப்பி வைத் தது. அந்தக் குழுத்தலைவர்கள் பாட்னாவில் அனைத்துக் கட்சித் தலைவர்களை சந்தித்து கருத்துக் கேட்டது.அப்போது பெரும் பாலான கட்சிகள் ஜூலை மத்தி யில் ஒரே கட்டமாகத் தேர்தலை நடத்தலாம் என்று யோசனை தெரிவித்ததை யடுத்தே இம் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.


## தமிழீழ மாவட்ட நீதிமன்று-கிளிநொச்சி

வ/இல:102/04
தன்மை: மணநீக்கம்

வழக்காளி:ஆழ்வாப்பிள்ளைஆனந்தகுமார்,
21/டி8 உருத்திரபுரம்,
கிளிநொச்சி.

எதிராளி: ஆனந்தகுமார் ஜெயகௌரி,
மே/பா:ப. இராமச்சந்திரன்,
யூனியன்குளம்,
கோணாவில்.

மேற்படி எதிராளிக்கு!
இடைக்கால தீர்வை தொடர்பான பகிரங்க அறிவித்தல

மேலே பெயர் முகவரியிடப்பட்ட எதிராளியாகிய உமக்கெதிராக வழக்காளியால் இவ்வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு உரிய முறையில் அழைப்பாணை, வழக்கறிக்கை என்பன அனுப்பி வைக்கப் பட்ட சமயம் குறித்த முகவரியில் நீர் இல்லாததால் கடந்த 14.07.2004 அன்று உமக்கான பகிரங்க அறிவித்தல் பிரசுரிக்கப் பட்டும்மன்றில் உரிய முறையில் தோன்றித் தகுதியான எந்த நடவடிககையையும் மேற்கொள்ளாமையினால் உமக்கெதிராக ஒருமுக விளக்கம் இடம்பெற்று அதன் அடிப்படையிலான தீர்ப்பும் மன்றின் ஊடாக வழங்கப்பட்டுள்ளது. அத்தீர்ப்பிற்கான இடைக்கால தீர்வையும் இத்துடன் பிரசுரிக்கப்படுகின்றது. இதில் ஏதும் ஆட்சேபனைகள் இருப்பின் இப்பிரசுரம் பிரசுரிக்கப்பட்டு 21 நாட்களுக்குள் மன்றில் தோன்றி நடவடிக்கை எடுக்குமாறும் தவறின் இவ்விடைக்காலத் தீர்வை முற்றான தீர்வையாக்கப்படும் என்பதனை இதன் மூலம் அறியத்தருகின்றோம்.

"மன்றின் கட்டளைப்படி"

வரைவு:-
சீ.க.அமல்நிக்சன்,
சட்டத்தரணி,
மாவட்ட மேல்மேன் முறையீட்டு மன்று,
கிளிநொச்சி.

செ.மாணிக்கராசா
பதிவாளர்,
மாவட்டமன்று,
கிளிநொச்சி.

(5931)

## தமிழீழ மாவட்ட நீதிமன்று-கிளிநொச்சி

வ/இல:102/04
தன்மை: மணநீக்கம்

வழக்காளி:ஆழ்வாப்பிள்ளைஆனந்தகுமார்,
21/டி8 உருத்திரபுரம்,
கிளிநொச்சி.

எதிராளி:திருமதி.ஆனந்தகுமார் ஜெயகௌரி,
மே/பா:ப.இராமச்சந்திரன்,
யூனியன்குளம்,
கோணாவில்.

இடைக்கால தீர்வை

இந்த 2005ஆம் ஆண்டு மார்ச்மாதம் நாள் இவ்வழக்கு இம்மன்றில் நீதியாளர் செல்வி:சாதனா அவர்கள் முன்னிலையில் கூப்பிடப்பட்டபோது எதிராளி சமுகம் கொடுக்காததுடன், இதற்கு முன்னைய பல தவணைகளுக்கும் சமுகம் கொடுக்காததையிட்டு இவ்வழக்கு ஒருமுக விளக்கத்திற்கு எடுத்ததின் அடிப்படையில் அதாவது வழக்காளியால் முன்வைத்த வழக்கறிக்கையின் 1ஆம் உரிமைக்கோரிக்கையின் பிரகாரம் வழக்காளி எதிராளியிடமிருந்து நிரந்தர விவாகரத்துப்பெறுவதாக ஒருமுகத் தீர்ப்பு வழங்கப்பட்டதன் பிரகாரம் இவ்விடைக்காலத் தீர்வை பதியப்படுகின்றது.

2005ஆம் ஆண்டு மே மாதம் 27ஆம் நாள்.

வரைவு:-
சீ.க.அமல்நிக்சன்
சட்டத்தரணி
மாவட்ட மேல், மேன் முறையீட்டு மன்று
கிளிநொச்சி.

சாதனா
நீதியாளர்,
மாவட்டமன்று,
கிளிநொச்சி.

(5932)

# இங்கிலாந்து அணிக்கு அபார வெற்றி




லோட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற பங்களாதேஷ் அணியுடனான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட்போட்டியில் இங்கிலாந்து அணி ஒரு இன்னிங்ஸ் 261 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

போட்டியின் முதல்நாள் பங்களாதேஷ் முதலில் துடுப்பெடுத்தாடி 108 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தது. பதிலுக்கு ஆடிய இங்கிலாந்து தனது முதல் இன்னிங்சில் மூன்று விக்கெட் இழப்பிற்கு 528 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்தியது. பின்னர் 421 என்ற வெற்றியிலக்குடன் தனது இரண்டாவது இன்னிங்சை 90 ஓட்டங்களுக்கு ஐந்து விக்கெட் என்ற நிலையில் ஆரம்பித்த பங்களாதேஷ் நேற்று முன்மேலும் 69 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தது. எனவே 159 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்த நிலையில் இங்கிலாந்து ஒரு இன்னிங்சாலும்261 ஓட்டங்களாலும் வெற்றிபெற்று சாதனை படைத்தது. இங்கிலாந்து சார்பில் பந்துவீசிய பிளின்டொப் ஹார்மிசன் ஜோன்ஸ் மூவரும் தலா மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பங்களாதேஷ் சார்பில் காலித் மசூத் மட்டுமே 44 என்றஅதிகபட்ச ஓட்டத்தைப் பெற்றுக்கொடுத்தா.

# பாபடோஸ் கிரிக்கெட் வெற்றிவாய்ப்பில் மேற்கிந்தியத்தீவு



மேற்கிந்தியத்தீவுகள், பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் பாபடோசில் நடைபெறும் முதலாவது கிரிக்கெட் டெஸ்ட்டின் மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிவில் நேற்று முன்தினம் 573 ஓட்டம் என்ற வெற்றியிலக்கு நோக்கி ஆடும் பாகிஸ்தான் அணி தனது இரண்டாவது இன்னிங்சில் நான்கு விக்கெட் இழப்பிற்கு 113 ஓட்டங்களைப் பெற்று இக்கட்டான நிலையிலுள்ளது.

இப்போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் அணி தனது முதல் இன்னிங்சில் 345 ஓட்டங்களையும், இரண்டாவது இன்னிங்சில் 371 ஓட்டங்களையும் பெற்றது. இரண்டாவது இன்னிங்சில் சந்தர்போல் ஆட்டமிழக்காது 153 ஓட்டங்களைப் பெற்றார். பாகிஸ்தானின் சல்மன்பட், யூனிஸ்கான் ஆகியோர் ஓட்டம் பெறாத நிலையிலும் யசிர் அமிட் 16 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். பசிட் எல்.பி. டபிள்யூ முறையில் ஆட்டம் இழந்தார்.

அப்ரிடி 32 ஓட்டங்களுடனும் அசிம் கமல் 38 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.

# சச்சினுக்கு பதிலாக லட்சுமன்

சுனாமி கண்காட்சி கிரிக்கெட்டில் சச்சினுக்கு பதிலாக லட்சுமன் இடம் பெறுகிறார் உலகலெவன் அணித்தலைவர் பொறுப்பை நியூசிலாந்தின் பிளமிங் ஏற்கிறார்.

சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதி திரட்டுவதற்கு மெல்போர்ன் கிரிகெட் சபை எம்.சி.சி. மற்றும் சர்வதேச லெவன் அணிகள் மோதும் போட்டிக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இப்போட்டி வரும் ஜூன் 14இல் லார்ட்சில் நடக்கிறது. எம்.சி.சி லெவன் அணிக்கு சச்சின் தலைவராக நியமிக்கப்பட்டு இருந்தா். ஆனால் முழங்கையில் சத்திரசிகிச்சை செய்து கொண்ட இவர் போட்டியில் பங்கேற்க இயலாத நிலையிலுள்ளார் சச்சினுக்கு பதிலாக லட்சுமன் இடம் பெறுகிறார். தலைவர் பொறுப்பை நியூசிலாந்தின் ஸ்டீபன் பிளமிங் ஏற்கிறார். இது குறித்து எம்.சி.சி. சபைத் தலைவர் ஜான் ஸ்டீபன்சன் கூறுகையில், "சச்சின் விளையாட இயலாதது மிகுந்த ஏமாற்றம் அளிக்கிறது. ஆனாலும் போட்டியில் பங்கேற்று ரசிகர்களை உற்சாகப்படுத்துவார். எங்களது அழைப்பை லட்சுமன் ஏற்றுக் கொண்டது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது." என்றார்.

எம்.சி.சி. லெவன் ஸ்டீபன் பிளமிங் தலைவர் கிறிஸ்கெய்ல், சர்வான், லட்சுமன், காலிஸ் அண்டி பிளவர், சங்கக்காரா, போலக், கும்ளே, முரளிதரன், அக்தர்.

சர்தேசலெவன் லாறா (தலைவர்) சேவாக் ஜெயசூரியா கிரேயம் ஸ்மித், டிராவிட், சந்தர்போல், கிறிஸ்கெய்ர்ன்ஸ், ஷேன் வோர்ன், வாஸ்,சமீ., நிடினி.

# பிரெஞ் ஓபன் டென்னிஸ் நட்சத்திர வீரர்கள் முன்னேற்றம்

கிராண்ட் ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான பிரஞ் ஓபன் டென்னிஸ் போட்டிகள் பாரிஸ் நகரில் நடந்து வருகிறது.


இதில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் மூன்றாவது சுற்றுப் போட்டியில் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த முன்னணி வீராங்கனை மவுரசிமோ, செரிபியா வீராங்கனை அனா இவானோ விக்கை எதிர்கொண்டார். இதில் 4-6,6-2,4-6 என்ற செட் கணக்கில் மவுரசிமோ தோல்வி அடைந்தார்.

கலப்பு இரட்டையர் பிரிவின் முதல் சுற்று ஆட்டத்தில் லிசாரேமண்ட் மற்றும் இந்தியாவின் மகேஷ் பூபதி ஜோடி விர்ஜினா-ஜோனத் தான் ஜோடியை எதிர்த்து விளையாடியது. இந்த ஆட்டத்தில் 6-3, 6-4, என்ற நேர் செட்டில் மகேஷ் பூபதி-லிசா ரேமண்ட் ஜோடி வெற்றி பெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியது.

இன்னொரு ஆட்டத்தில் இந்தியாவின் லியாண்டர் பயஸ் மற்றும் மார்ட்டினா நவரத்தினலோவா ஜோடி ஸ்டெபானி-நிக்கோலாஸ் தேவிலார் ஜோடியை எதிர்த்து விளையாடியது. இதில் பயஸ் நவரத்தி லோவா ஜோடி 6-4,6-3 என்ற செட் கணக்கில் இரண்டாவது சுற்றுக்கு முன் னேறியது.

பெண்கள் ஒற்றையர் பிரிவில் டேவன் போர்ட்டும். கிம் கிளிஸ்டர் ஒரு ஆட்டத்திலும் மேரி பியர்ஸ் பார்ட்டி சின்டர் இன்னொரு ஆட்டத்திலும் மரியா ஷரபோவா-நியுரியா மற்றொரு ஆட்டத்திலும் மோதுகிறார்கள். கலப்பு இரட்டையர் பிரிவில் இரண்டாவது சுற்று ஆட்டத்தில் பயஸ் நவரத்திலோவா இணை சபினாசீமொன் இணைய எதிர்த்து ஆடும்.

# ஹர்பஜன்சிங்கின் பந்துவீச்சு ஐ.சி.சி அனுமதியளித்தது



இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன்சிங். கடந்த மார்ச் மாதம் பாகிஸ்தானுக்கு எதிராக கொல்கத்தாவில் நடந்த டெஸ்ட் போட்டியில் தூஸ்ரா முறையில் பந்து வீசினார்.

அப்போது ஹர்பஜன் பந்து வீசும் முறை குறித்து போட்டி நடுவர் சர்வதேச கிரிக்கெட் சபையிடம் புகார் செய்தார். இதையடுத்து ஹர்பஜனிடம் விசாரணை நடத்தவும், அவரது பந்து வீச்சுப் பற்றி ஆய்வு செய்யவும் சர்வதேச கிரிக்கெட் குழு மார்ச் போர்டஸ் என்பரை நியமித்தது.

அவர் பாகிஸ்தானுக்கு எதிராக ஹர்பஜன்சிங் பந்து வீசியது தொடர்பாக போட்டி நடுவர்கள் கொடுத்த அறிக்கையை ஆய்வுசெய்து ஒரு அறிக்கை தயார் செய்தார். அதன் அடிப்படையில் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் ஹர்பஜன்சிங் பந்துவீச ஐ.சி.சி நிபந்தனையுடன் அனுமதி அளித்திருக்கிறது. இது தொடர்பாக ஐ.சி.சி பொதுமுகாமையாளர் டேவிட் ரிச்சர்டுசன் கூறியதாவது,

பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் சந்தேகத்திற்கு இடம் அளிக்கும் வகையில் ஹர்பஜன் பந்து வீசி இருப்பதை மேற்கு அவுஸ்திரேலியாவில் உள்ள பல்கலைக்கழகத்தில் நடந்த சோதனையில் மார் போர்டஸ் கண்டு பிடித்து இருக்கிறார்.

பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் ஹர்பஜன் பந்து வீசும் முறை, பந்தை வீசும் வேகம் ஆகியவற்றில் வித்தியாசம் இருப்பதை அவர் கண்டு பிடித்தார். இருப்பினும் வீடியோ காட்சியில் பல்வேறு கோணங்களில் ஆராய்ந்தபோது அவரால் ஒரு இறுதி முடிவு எடுக்க முடியவில்லை.

இதையடுத்து நிபந்தனையின் அடிப்படையில் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் விளையாட ஹர்பஜனுக்கு ஐ.சி.சி அனுமதி அளித்திருக்கிறது. அவர் சோதனை மையத்திற்குச் சென்று தனது பந்து வீச்சில் உள்ள முரண்பாடுகளை அகற்ற வேண்டும்.

அவரது பந்து வீச்சு தரம் குறைந்துவிட்டதாகப் போட்டி நடுவர் மீண்டும் ஒருமுறை புகார் கூறினால் உடற்கூறு ரீதியாக ஹர்பஜனிடம் ஆய்வு நடத்தப்படும்போது அவரிடம் எந்தவித சோதனையும் நடத்தப்படமாட்டாது என அவர் தெரிவித்துள்ளார்.

# இந்திய கிரிக்கெட் அணியில் தலைவராகும் எண்ணமில்லை என சேவாக் தெரிவிப்பு

இந்திய கிரிக்கெட் அணி அதிரடி ஆட்டக்காரர் வீரேந்தர் சேவாக் புனேவில் அளித்த பேட்டியில் தெரிவித்தார். மேலும் அவர் தெரிவிக்கையில்;

இந்திய கிரிக்கெட் அணித்தலைவராகும் எண்ணம் இதுவரை என்னிடம் இல்லை என அதுபற்றி இப்போது நினைக்கவே இல்லை. தன்னைவிட மூத்த வீரர்கள் அணியில் நிறையப் பேர் உள்ளனர் என்றும் தெரிவித்துள்ளார்.

பயிற்சியாளர் ஜோன்ரைட் போல் சப்பலிடமும் நல்ல அனுபவம் கிடைக்கும் என்று நம்புவதாக தெரிவித்த அவர் விளம்பரப் படங்களில் நடிப்பதால் ஆட்டத்தில் பாதிப்பு இல்லை. ஓய்வு நேரத்தில் தான் அதில் பங்கேற்கிறோம் என்றும் கூறியுள்ளார்.

# இங்கிலாந்து கவுன்டி கிரிக்கெட் இர்பான் பதான் 4 விக்கெட் சாய்த்தார்

கவுன்டி டிவிசன் போட்டியின் ஒரு ஆட்டத்தில் மிட்லெசெஸ்-சுசெஸ் அணிகள் மோதின. இதில் இந்திய வேகப்பந்து வீச்சாளர் இர்பான் பதான் மிட்லெசெஸ் அணியில் இடம்பெற்றுள்ளார்.

மிட்லெசெஸ் அணி முதல் இன்னிங்சில் 401 ஓட்டங்களில் ஆட்டமிழந்தது. இர்பான் பதான் 41 ஓட்டங்களைப் பெற்றார். சுசெஸ் அணி முதல் இன்னிங்சில் 332 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தது. இர்பான் பதான் நான்கு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். பின்னர் இரண்டாவது இன்னிங்சை ஆடிய மிட்லெசெஸ் அணி எட்டு விக்கெட் இழப்புக்கு 222 ஓட்டங்களை எடுத்தது.




# ஒட்டுசுட்டான் பிரதேச கழகங்களுக்கிடையேயான போட்டி

ஒட்டு சுட்டான் பிரதேச கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் இன்றும், நாளையும் ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதில் கற்சி[illegible] பண்டாரவன்னியன் விளையாட்டுக் க[illegible] ஒட்டுசுட்டான் ஈஸ்வரன் விளையாட்டுக் [illegible] சம்மளங்குள விளையாட்டுக் க[illegible], பரந்தாமன் விளையாட்டுக் கழகம், [illegible] மின் ஒளி விளையாட்டுக் கழகம், [illegible] விளையாட்டுக் கழகங்களின் இறுதி நாள் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

இவ் விளையாட்டில் அனைத்து விளையாட்டுக் கழகங்[illegible] பங்கு பற்றுமாறு ஒட்டுசுட்டான் விளையாட்டு உத்தியோ கத்தர் [illegible]த்துள்ளார். (05)

# விளையாட்டு வீரர்களுக்கான மிக உயர்ந்த 'கேல் ரத்னா' விருதுக்கு கங்குலி, ராவிட் பெயர் சிபாரிசு

விளையாட்டு வீரர்களுக்கான மிக உயர்ந்த 'கேல் ரத்னா' விருதுக்கு இந்திய கிரிக்கெட் அணித் தலைவர் கங்குலி, துணைத்தலைவர் ராவிட் ஆகியோரின் பெயர் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

சிறந்த விளையாட்டு வீரர் , வீராங்கனைகளுக்கு ஆண்டு தோறும் மத்திய அரசு விருது வழங்கிக் கௌரவித்து வருகிறது. இதில் மிக உயரிய விருது 'ராஜீவ் காந்தி கேல்ரத்னா' ஆகும். அடுத்தது அர்ஜுனா விருதாகும்.


இந்த ஆண்டுக்கான 'கேல் ரத்னா' விருதுக்கு இந்திய-கிரிக்கெட் அணித்தலைவர் சவுரவ் கங்குலி, துணைத்தலைவர் ராகுல்ராவிட் ஆகியோரின் பெயர்களை இந்திய கிரிக்கெட சபை மத்திய விளையாட்டு சபைக்கு சிபாரிசு செய்துள்ளது.

இதேபோல் இளம் வீரர்கள் யுவராஜ்சிங், முகமது கயுப் ஆகியோரின் பெயர்' அர்ஜுனா' விருதுக்குப் பரிந்துரைக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தகவலை இந்திய கிரிக்கெட்சபை துணைத் தலைவர் ராஜீவ் சுக்கலா வெளியிட்டுள்ளார்.

கிரிக்கெட் வீரர்களில் சச்சின் டெண்டுல்கர் 1997-98 ஆம் ஆண்டில் 'கேல்ரத்னா' விருது பெற்றுள்ளார். மற்ற கிரிக்கெட் வீரர்கள் யாரும் இந்த விருதைப் பெறவில்லை.

அர்ஜுனா விருதை டெண்டுல்கர் (1994), கும்ளே(1995) கங்குலி (1997), ராவிட் (1998), வி.வி.எஸ். லட்சுமணன்(2001), வீரேந்திரர் ஷேவாக்(2002), ஹர்பஜன்சிங் (2003) ஆகியோர் பெற்றுள்ளனர்.


# பிரதேச செயலகமட்ட விளையாட்டுப் போட்டியில் வெற்றிபெற்ற கழகங்களுக்கு பரிசில்



அண்மையில் இடம்பெற்ற துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான 2005 ஆம் ஆண்டு விளையாட்டுப்போட்டிகள் பிரதேச செயலர் நா. நந்தகுமார் தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் வெற்றிபெற்ற விளையாட்டுக் கழகங்களுக்குப் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் செ. தயானந்தா அவர்களால் பரிசில்கள் வழங்கப்பட்டன

## சிந்தனைக்கு



தமிழ் மக்களின் விடுதலைக்கான ஒரு தேசிய மக்கள் படையாக, நாங்கள் எங்கள் போரை முன்னெடுத்துச் செல்கின்றோம்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 30-05-2005
தொலைபேசி } 060-2213244
தொலைநகல் } 021-2283948
மின் அஞ்சல்
natham23 ela@ yahoo.com

## கண்காணிப்புக் குழுவின் கவலை?

விடுதலைப்புலிகள் இயக்கத்திடம் விமான ஒடுபாதையும், சில விமானங்களும் இருப்பதாக வெளியாகியுள்ள தகவல்கள் குறித்து சிறிலங்கா அரசு போன்று போர்நிறுத்தக்கண்காணிப்புக்குழுத் தலைவரும் கவலை கொண்டுள்ளது போல் தெரிகின்றது. இக்கவலைக்கு சிலவேளை இவ் விமானத்தள ஓடுபாதையை அன்றி விமானங்களை சிறிலங்கா அரசாங்கம் தாக்கி அழிக்க முயன்றால் யுத்த நிறுத்தம் முடிவிற்கு வந்து விடலாம் என அவர் ஐயப்படுவதும் காரணமாக இருக்கலாம்.

ஆனால் ஒன்று விடுதலைப்புலிகளின் விமான ஓடுபாதை மற்றும் விமானங்கள் தொடர்பான விடயங்கள் புதியதொன்றல்ல. ஏற்கனவே அதாவது யுத்த நிறுத்த ஒப்பந்தத்திற்கு முன்பாகவே விடுதலைப்புலிகளிடம் விமான ஓடு பாதையும், வானூர்திகளும் உள்ளன என்ற விவகாரம் பேசப்பட்ட விவகாரமே. அது மட்டுமன்றி விமானங்கள் மூலம் புலிகள் தாக்குதல் நடத்தலாம் என்ற சந்தேகத்தின் பெயரில் விமான எதிர்ப்பு ஏவுகணைகள் பீரங்கிகள் என்பன கூட பாதுகாப்புத் தேவைப்படும் பகுதிகளில் சிறிலங்கா அரசால் பொருத்தப்பட்டமை குறித்த தகவல்களும் வெளியாகியிருந்தன.

இந்நிலையில் விமான ஓடுபாதை, விமானங்கள் என்பன புதிய விடயங்களல்ல. ஆனால் தற்பொழுது இவ்விவகாரத்தைச் சிறிலங்கா அரசு தூக்கிப் பிடிக்க முனைவதாவது தமது நெருக்கடிநிலையை திசைதிருப்பி விடுவதற்கே ஆகும். ஆனால் கண்காணிப்புக்குழு இதில் காட்டும் அக்கறை சிறிலங்கா அரசாங்கத்தின் எதிர்பார்க்கையை நிறைவு செய்துள்ளது என்றே கூறலாம்.

கண்காணிப்புக்குழு இவ் விவகாரத்தைக் கையில் எடுத்துள்ளமையானது எதன் அடிப்படையிலானதாகவும் இருக்கலாம். ஆனால் ஒன்று கண்காணிப்புக்குழு இவ்விடயத்தில் புரிந்துணர்வு உடன்பாட்டின் அடிப்படையில் செயற்படுகின்றதா? என்ற கேள்வி எழுவது தவிர்க்க முடியாததாகியுள்ளது.

ஏனெனில் புரிந்துணர்வு உடன்பாட்டிற்கு சில முக்கிய விடயங்கள் அடிப்படையாகவுள்ளன. முக்கியமாக இருதரப்புக்கு இடையிலான இராணுவ வலுச் சமநிலை. இது பாதிக்கப்படும் போதே யுத்தம் தவிர்க்க முடியாததாகின்றது. மீண்டும் ஒரு யுத்தம் இடம்பெறாமல் இருப்பதற்கும் இவ்வலுச் சம நிலையே காரணமாகும்.

இலங்கையில் யுத்த நிறுத்த உடன்பாடு செய்துகொண்டபோது இரு தரப்பின் இடையேயுமான வலுச்சமநிலை உறுதியாகப் பேணப்பட வேண்டும் என போர் நிறுத்தக்கண்காணிப்புக் குழுவினரே வலியுறுத்தி வந்துள்ளனர். பல தடவை வெளிப்படையாகவும் தெரிவித்துள்ளனர்.

இவ் இராணுவச்சமநிலை போரைத்தவிர்க்கும் முக்கியமான காரணி என்பதில் எவருமே சந்தேகம் கொள்ளத்தேவையில்லை. ஆனால் சிறிலங்கா அரசாங்கமோ போர் நிறுத்த காலத்தைப் பயன்படுத்தி தமது ஆயுத பலத்தை அதிகரிப்பதற்குத் தீவிரமாக முற்படுகின்றது. சிறிலங்காவின் முப்படைகளும், யுத்த நிறுத்த உடன்பாடு கைச்சாத்தாகும் போது இருந்ததை விட தற்போழுது பல மடங்கு பலம் பெற்றுள்ளன. இதனை நாம் கூறவில்லை அரசாங்கத் தரப்புத் தகவல்களில் இருந்தும், சர்வதேச இராணுவ ஆய்வாளர்களின் தகவல்களின் இருந்துமே புரிந்து கொள்ளமுடியும்.

இந்த நிலையில், விடுதலைப்புலிகளின் பலம் அதிகரிக்கப்படாது போனால் எவ்வாறு இராணுவச் சமநிலை என்பதுபேணப் படக் கூடியதாக இருக்கமுடியும்? இதனைத்தவிர நாம் அறிந்த வரையில் யுத்த நிறுத்த உடன்பாட்டில் விடுதலைப்புலிகள் தமது பலத்தைப் பெருக்குவதற்கோ, புதிய படைப்பிரிவுகளை அமைப்பதற்கோ எந்த வித தடையும் இருப்பதாகவோ,அன்றி யுத்த நிறுத்த மீறலாக அமையும் என்பதற்கான சரத்துக்கள் இருப்பதாகவோ தெரியவரவில்லை.

மேலும் புரிந்துணர்வு உடன்பாடு கைச்சாத்தாகி மூன்றாண்டுகள் கடந்து விட்ட நிலையிலும் இன்னமும் இவ் உடன்பாட்டில் நிறைவேற்றப்படாத விடயங்கள் பல உள்ளன. ஆனால் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு இதில் கவனம் எதனையும் செலுத்துவதாகவோ அன்றி இதனால் யுத்தநிறுத்தம் எதிர்நோக்கியுள்ள நெருக்கடிகள் பற்றியோ கவலை கொண்டதாகத் தெரியவில்லை.

ஆனால், இன்று யுத்த நிறுத்தத்தைத் தொடர்ந்தும் அரசு பேணுவதற்கு காரணமாகவுள்ள விடயத்திலேயே காண்காணிப்புக்குழு கவலை கொண்டுள்ளது. அதாவது சிறிலங்கா அரசாங்கம் இன்னமும் யுத்த நிறுத்தத்தை முறித்துக்கொள்ளாமைக்குக் காரணமாகவுள்ள விடுதலைப் புலிகளின் இராணுவ ஆற்றல் குறித்தே கண்காணிப்புக்குழு கவலை கொண்டுள்ளது போலுள்ளது.

கடந்த காலத்தில் இடைக்கால நிர்வாகசபை யோசனையை அரசு நிராகரித்தது. மனிதாபிமான உடனடித் தேவைகளுக்கான கட்டமைப்பை செயலிழக்கச் செய்தது. தற்பொழுது சுனாமி அனர்த்த மீள் கட்டுமானத்திற்கான பொதுக்கட்டமைப்பையும் அரசாங்கம் ஏற்கும் நிலையில் இல்லை. ஆனால் இவற்றைப் போன்று யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை முற்றாக முறித்துக் கொள்ளவும் அரசாங்கம் தயாராக இல்லை.

இவ்வாறு அரசாங்கம் நடந்துகொள்வதற்கு ஒரேகாரணம் புலிகளை இராணுவ ரீதியில் தோற்கடித்துவிடமுடியாது என்ற உணர்வே. இந்நிலை மாற்ற முறுமாயின் யுத்தத்தை அரசு இன்றே ஆரம்பித்து விடும் என்பதை யுத்த நிறுத்த கண்காணிப்புக்குழு புரிந்துகொள்ளவேண்டும்.

# புலிகளின் தளபதிகள் கிழக்குப் பயணத்திற்கு உலங்கு வானூர்தி வழங்க அரசு இழுத்தடிப்பு

விடுதலைப் புலிகளின் தளபதிகள் கிழக்கே செல்ல உலங்கு வானூர்தி வழங்க சிறிலங்கா அரசு இழுத்தடிப்புச் செய்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

திருகோணமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் சொர்ணம் வன்னியிலிருந்து திருகோணமலை செல்ல சிறிலங்கா விமானப்படை உலங்குவானூர்தி வழங்க மறுப்புத் தெரிவித்துள்ளது. விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தின் ஊடாக சிறிலங்கா அரசின் சமாதானச் செயலகத்திற்கு கடந்த இரண்டு தினங்களுக்கு முன்பு அறிவிக்கப்பட்ட போதும் இதுவரை சிறிலங்கா அரசிடம் இருந்து எந்தவொரு பதிலும் கிடைக்கப்பெறவில்லை.

அதேபோல் மட்டு.அம்பாறை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் பானு கிழக்கே செல்ல உலங்கு வானூர்தி தேவை எனக் கேட்ட போதும் அதற்கான பதிலையும் சிறிலங்கா அரசு இழுத்தடிப்புச் செய்து வருகின்றது. கடந்த சில வாரங்களுக்கு முன் கிழக்கிலிருந்து வருகை தந்த போராளிகள் மீண்டும் கிழக்கே செல்ல கண்காணிப்புக் குழு ஊடாக விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு சிறிலங்கா அரசு பதில் கூறாது இழுத்தடிப்புச் செய்து வருகின்றமையும் இங்கே குறிப்பிடத்தக்கது.

# தனிப்பட்ட தகராற்றால் குண்டு வெடிப்பு; ஏறாவூரில் முஸ்லிம் இளைஞர் பலி; மூவர் காயம்

(மட்டக்களப்பு)

ஏறாவூரிலுள்ள கடைத் தெருவொன்றில் நேற்று முன்தினம் இரவு 8.00 மணியளவில் கைக்குண்டு வெடித்ததில் முஸ்லிம் இளைஞர் ஒருவர் பலியாகியுள்ளார். மேலும் மூன்று இளைஞர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

தனிப்பட்ட தகராறே இதற்குக் காரணமெனத் தெரியவருகின்றது. ஏறாவூரைச் சேர்ந்தவரான அப்துல் காதர் கபூர் உசேன் (வயது -22) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். மேலும் சீனி முகமது பஸ்லிம் (வயது -23), பதுர்தின் காதர் (வயது-22) பாடசாலை மாணவரான குசன் சலீன் (வயது-16) ஆகியோரே படுகாயமடைந்துள்ளனர். இச் சம்பவத்தில் உயிரிழந்த நபருக்கும் படுகாயமடைந்தவர்களுக்கும் இடையில் தகராறு இருந்து வந்த நிலையிலேயே இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது; கபூர் உசேனின் சகோதரியை மற்றைய இருவரும் கேலி செய்ததாகவும், இதனால் இவர்கள் மீது கபூர் உசேன் ஆத்திரம் கொண்டிருந்ததாகவும், தெரிய வருகிறது நேற்று முன்தினம் இரவு குறித்த கடைப்பகுதியில் ஏனைய இருவரும் தேநீர் அருந்திக் கொண்டிருந்த வேளை கைக்குண்டு ஒன்றை மறைத்து வைத்துக் கொண்டு கபூர் உசேன் அங்கு வந்துள்ளார். அப்போது தவறுதலாக நிலத்தில் வீழ்ந்த குண்டு வெடித்ததால் அவ்வனர்த்தம் ஏற்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குசன் சலீன் என்ற பாடசாலை மாணவர் தற்செயலாக இக் குண்டு வெடிப்பில் படுகாயமடைந்துள்ளார். இக் கைக்குண்டு எவ்வாறு கிடைத்தது என்பது பற்றிய விபரம் எதுவும் தெரியவில்லை.

-இவ்வருட இறுதிக்குள் சனாதிபதித் தேர்தலை நடத்தக்கோரி-

# கொழும்பில் மாபெரும் ஆர்ப்பாட்டத்திற்கு எதிர்க்கட்சி தீவிர நடவடிக்கை

(கொழும்பு)

தென்பகுதியிலுள்ள மக்களை ஒன்று திரட்டி கொழும்புக்கு வரவழைத்து ஒருவாரத்திற்குள் மாபெரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்துவதற்கு எதிர்க்கட்சி நடவடிக்கை எடுத்துள்ளது.

இவ்வருட இறுதியில் சனாதிபதித் தேர்தல் நடத்தியே தீர வேண்டுமென சனாதிபதிக்கு அழுத்தம் கொடுப்பதற்காகவே இவ் ஆர்ப்பாட்டம் நடத்தப்படுவதாக எதிர்க் கட்சியினர் அறிவித்துள்ளனர். எதிர்க் கட்சித் தலைவர் தலைமையின் கீழ் மாத்தறை, தெவிந்தர தேவஸ்தானத்தில் இருந்து கொழும்பை நோக்கி இப்பேரணி புறப்படுமென எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க செய்தியாளர்கள் மத்தியில் தெரிவித்துள்ளார். அடுத்த மாதம் இரண்டாம் திகதி ஆரம்பமாகும் இப்பேரணி கொழும்பை வந்தடையுமென எதிர்க்கட்சியினர் தெரிவித்துள்ளதுடன், இறுதிக் கூட்டத்தில் இவ்வருட இறுதியில் சனாதிபதி தேர்தல் நடத்தப்பட வேண்டுமென வலியுறுத்தப்படும் எனவும் தெரிவித்துள்ளனர்.

# நாட்டின் பிரச்சினைகளைத் தீர்க்க சனாதிபதித் தேர்தலை நடத்துக

*– எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை*

(கொழும்பு)

நாட்டிலுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உடனடியாக சனாதிபதித் தேர்தலை நடத்தவேண்டுமென எதிர்க் கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். இந்த அரசாங்கத்தை அகற்றுவதன் மூலமே நாட்டின் பிரச்சினையைத் தீர்க்க முடியுமென எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க பிபிலை தேர்தல் தொகுதியில் தம்பலாவெல பகுதியில் நடந்த மக்கள் சந்திப்பின்போது தெரிவித்தார்.

அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்ந்துள்ளதால் மக்கள் வாழ முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதாகத் தெரிவித்த எதிர்க் கட்சித் தலைவர், இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசாங்கத்திடம் திட்டங்கள் எதுவுமில்லை என்றும் குறிப்பிட்டார்.

விவசாயிகளை பாதுகாப்பதாக வாக்குறுதி அளித்து அரசாங்கம், பதவிக்கு வந்தது இன்று அவர்கள் தமது உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்ய முடியாமல் திண்டாடி வருகின்றனர். சனாதிபதித் தேர்தலை நடத்துவதன் மூலம் மக்கள் விருப்பமான அரசாங்கம் ஒன்றைத் தெரிவு செய்து கொள்ள முடியும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்துள்ளார்.

# நீர்கொழும்பில் வாகன விபத்து; நான்கு பேர் பலி; எட்டுப் பேர் காயம்

(கொழும்பு)

நீர்கொழும்பு கட்டுவப்பிரதேசத்தில் நேற்று அதிகாலையில் ஏற்பட்ட வாகன விபத்தில் நான்கு பேர் உயிரிழந்துள்ளனர். எட்டுப்பேர் பலத்த காயங்களுக்கு உள்ளாகினர். வான் ஒன்றும் கன்டேனர் வாகனம் ஒன்றும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டது.

கன்டேனரில் மோதியதில் மூன்று தடவைகள் வான் சுழன்றதாக இவ்விபத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

வான்வேகமாகப் பயணம் செய்தது என்றும் பாதையில் காணப்பட்ட குழி ஒன்றில் விழாமல் செல்ல முயன்ற போது இவ்விபத்து இடம்பெற்றுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இச் சம்பவத்தின்போது வானில் 13 பேர் பயணஞ்செய்தனர். காயமடைந்தவர்களில் ஏழு பேர் நீர்கொழும்பு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

ஆபத்தான நிலையில் இருக்கும் வானின் சாரதியும், ஏழு வயதுச் சிறுமியும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். கன்டேனரின் வாகனச்சாரதி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

# பூவரசம் வேலியும் புலுனிக்குஞ்சுகளும்;
# சிறப்புற நடைபெற்ற கவிதை நூல் அறிமுகவிழா



(யாழ்ப்பாணம்)

கவிஞர் புதுவை இரத்தினதுரையின் "பூவரசம் வேலியும் புலுனிக் குஞ்சுகளும்" கவிதைத் தொகுப்பு அறிமுகவிழா நேற்று முன்தினம் மாலை 4.00 மணிக்கு சிறப்புற நடைபெற்றது. யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பொதுச்சுடரினை கடற்புலி கப்டன் சுதாகரின் தந்தை அனாதரட்சகன் ஏற்றிவைத்தார். தமிழீழதேசியக் கொடியினை தமிழீழதேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் சஞ்சய் ஏற்றிவைத் தார்.இந்நிகழ்வில் தலைமையுரையை யாழ்மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி நிகழ்த்தினார். வெளியீட்டுரையினை சூழலியலாள ரும், ஊடகவியலாளருமான பொ.ஐங்கரநேசன் நிகழ்த்தினார். நூலின் முதல் பிரதியைத் தமிழீழ அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் வெளியிட்டு வைக்க, புதிய விஞ்ஞானக்கல்வி நிலைய இயக்குநர் இரா.அருட்செல்வம் பெற்றுக் கொண்டார். சிறப்புப் பிரதிகள் வழங்கலைத் தொடர்ந்து பேராசிரியர் என்.சண்முகலிங்கனும், எழுத்தாளர் ஐ.சாந்தனும் மதிப்பீட்டுரைகளை வழங்கினர்.

நிறைவாக கவிஞர் புதுவை இரத்தினதுரையின் ஏற்புரையும் வளநாடனின் நன்றியுரையும் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பாராளுமன்றஉறுப்பினர்கள், மதகுருமார்கள்,போராளிகள், பாடசாலை மாணவர்கள். இலக்கிய ஆர்வலர்கள் எனப் பெருந்திரளானோர் கலந்து கொண்டனர்.

# இரு நூல்களின் அறிமுகவிழா
# நேற்று கிளிநொச்சியில் இடம்பெற்றது

( அலவலக செய்தியாளர்)

இருபதாம் நூற்றாண்டு உலக இலக்கியம், சமஷ்டியா தனிநாடா ஆகிய இரு நூல்களின் அறிமுகவிழா நேற்று கிளிநொச்சியில் இடம்பெற்றது.

சாந்தனின் இருபதாம் நூற்றாண்டு உலக இலக்கியம் எனும் நூலினதும் மு. திருநாவுக்கரின் சமஷ்டியா தனிநாடா நூலினதும் அறிமுக விழா காலை 10.30 மணிக்கு கிளிநொச்சி மகாவித்தியாலய வளாகத்தில் நடைபெற்றது.

இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதனின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அறிமுகப்படுத்தப்பட்ட நூல்களில் "இருபதாம் நூற்றாண்டு உலக இலக்கியம்" எனும் நூலுக்கான அறிமுகவுரைகளைத் தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் யோகரத்தினம் (யோகி), கல்விப்பணிப்பாளர் த.குருகுலராசா ஆகியோர் வழங்கினர்.

சமஷ்டியா தனிநாடா எனும் நூலுக்கு கே.ரீ. கணேசலிங்கம் பு.சத்தியமூர்த்தி ஆகியோர் அறிமுகவுரைகளை நிகழ்த்தினர். இந்நிகழ்வில் தொடர்ந்து நூலாசிரியர்கள் பதிலுரைகளை நிகழ்த்தினர்.

இந்நிகழ்வில் விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன் உட்பட பல இலக்கியப்படைப்பாளிகளும், ஆர்வலர்களும் கலந்துகொண்டனர். (ச,லோ)







# ஜே.வி.பி.யின் எட்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் பொதுக்கட்டமைப்பை ஆதரிக்க முடிவாம்

## அமைச்சர் டி.எம் ஜயரத்ன கூறுகிறார்

ஜே.வி.பி.யின் 39 பாராளுமன்ற உறுப்பினர்களில் எட்டுப்பேர் அரசின் பொதுக்கட்டமைப்பை ஆதரிக்க முடிவு செய்துள்ளனர் என்று மக்கள் ஐக்கிய முன்னணியின் பொதுச் செலாளரும், அமைச்சருமான டி.எம்.ஜயரத்ன கொழும்பு ஊடகம் ஒன்றிற்குக் கருத்துத் தெரிவிக்கையில் உறுதிப்படுத்தியுள்ளார்.

பொதுக்கட்டமைப்பை சனாதிபதி சந்திரிகா செயற்படுத்தினாலும் அரசிலிருந்து வெளியேறுவதில்லையென ஜே.வி.பி முடிவெடுத்துள்ளதாக ஜே.வி.பி பாராளுமன்ற உறுப்பினர்கள் சுதந்திரக்கட்சியின் தலைவர்களிடம் தெரிவித்துள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

ஜே.வி.பி ஆதரித்தாலும் எதிர்த்தாலும் அக்கட்சியினரின் ஒரு பகுதியினர் பொதுக்கட்டமைப்பை ஆதரிப்பது உற்சாகமூட்டுவதாக இருப்பதாகவும் ஜயரத்ன தெரிவித்தார்.

பொதுக்கட்டமைப்பு குறித்து கருத்துத்தெரிவித்த சுற்றுச் சூழல் அமைச்சர் பௌசி அதைச் செயற்படுத்துவதைத் தவிர வேறு வழி சனாதிபதிக்கு இல்லை. இதைச் செயற்படுத்தாவிட்டால் நாட்டின் முன் மிகப்பெரிய பொய்யராக சந்திரிகா மதிப்பிடப்பட்டுவிடுவார் என்று அச்சம் தெரிவித்தார். இதற்காக அரசு அதிகாரத்திலிருந்து நாம் வெளியேற நேரிட்டாலும் அதற்குத் தயாராக இருக்கிறோம் என்றும் அவர் கூறினார். பொதுக்கட்டமைப்பை ஆதரிக்குமாறு ஜே.வி.பியிடம் நாம் கெஞ்சிக் கொண்டிருக்கமாட்டோம். இரு தரப்பினரும் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டிருக்கிறோம் தற்போதைய சூழலைக் கருத்திற் கொண்டு மக்களுக்கான பொதுக் கட்டமைப்பை உருவாக்கும் சனாதிபதியின் செயற்திட்டங்களை ஜே.வி.பி ஆதரிக்க வேண்டும். பொதுக்கட்டமைப்புக்காக ஜே.வி.பி அரசிலிருந்து வெளியேறாது என்று நம்புகிறேன் என்றார் அவர்.

# மின்னல் தாக்கி சிறுவன் பலி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பாண்டியந்தாழ்வைச் சேர்ந்த எட்டு வயதுச் சிறுவன் ஒருவர் மின்னல் தாக்கி உடல் கருகிப்பலியானார். யாழ். பரியோவான் கல்லூரி மாணவனான சிறிஸ்கந்தராசா தேவப்பிரியன் என்ற சிறுவனே பலியானவராவார்.

வீட்டு முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் தொடர்பாக பரிசோதனைகளை மேற்கொண்ட நீதவான் சடலத்தை பெற்றோரிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (33)

# இரண்டு நாட்களுக்கு மழை பெய்யலாம்

(கொழும்பு)

நாட்டின் பெரும்பான்மையான பகுதிகளில் அடுத்த இரண்டு நாட்களுக்கு இடியுடன் கூடிய மழை பெய்யும் என்று வளி மண்டலவியல் திணைக்களம் குறிப்பிடுகின்றது.

நாட்டின் தென்மேற்கு பருவப் பெயர்ச்சிக் காலநிலை ஆரம்பமாகி இருப்பது இதற்கு காரணமாகும். காலி மாத்தறை, களுத்துறை, கம்பஹா, கேகாலை, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் பலத்த காற்றுடன் மழை பெய்யும். புத்தளம் தொடக்கம் காலி வரையிலான கரையோரப்பகுதிக்கு அப்பால் உள்ள கடல் கொந்தளிப்பாக இருக்கும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# நாட்டுப்பற்றாளர் நடேசனின் முதலாம் ஆண்டு நினைவு நிகழ்வு

(அலுவலக செய்தியாளர்)

மூத்த பத்திரிகையாளரும் நாட்டுப் பற்றாளருமான ஜீ.நடேசன் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு நிகழ்வினை உணர்வு பூர்வமாக கொண்டாடுவதற்கு வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் ஏற்பாடுகளைச் செய்துள்ளது. மூத்த பத்திரிகையாளர் ஜீ.நடேசன் அவர்கள் படுகொலை செய்யப்பட்ட நினைவு நாளான நாளைய தினம் நெல்லியடி மத்திய மகாவித்தியாலத்தில் இந்நிகழ்வு நடைபெறவுள்ளது.

# புல்மோட்டை கனியமணல் தொழிலாளர்கள்; சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம்

புல்மோட்டை கனிய மணல் நிறுவன தொழிலாளர்கள் சாகும்வரையான உண்ணாவிரத போராட்டம் ஒன்றை ஆரம்பிக்கப்போவதாக எச்சரித்துள்ளனர்.

கடந்த ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் ஆட்சியில் இருந்த போது இயற்கை கனிப்பொருள் மணல் கூட்டுத்தாபனத்தின் புல்மோட்டை தொழிறசாலையின் ஊழியர்களாக தெரிவு செய்யப்பட்ட நூறு தொழிலாளர்கள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் பதவி விலக்கப்பட்டனர்

இந்த நிலையில் தம்மை மீண்டும் சேவையில் அமர்த்துமாறு கோரி இன்று முதல் ஊழியர்கள் உண்ணாவிரதத்தை ஆரம்பிக்கவுள்ளனர்.

# சனாதிபதி சந்திரிகா இந்தியா பயணம்

சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எதிர்வரும் வியாழக்கிழமை அரசுமுறைப் பயணமாக இந்தியா செல்கின்றார்.

இந்தியப்பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்து இருதரப்பு விவகாரங்கள் தொடர்பாக அவர் விரிவாகப் பேச்சு நடத்தவுள்ளார்.

விடுதலைப் புலிகளுடன் செய்து கொள்ளப்படவுள்ள சுனாமி பொதுக் கட்டமைப்பு ஒப்பந்தம் குறித்தும் சந்திரிகா எடுத்துக் கூறுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## சிவராமின்....

சடலமாக கிடத்தப்பட்டிருந்த ஜப்பான் இலங்கை நட்புறவு பாலப்பகுதியில் குறித்த உருவப்படத்தை வைத்து மலர்மாலையணிவித்து அஞ்சலியும் நிகழ்த்தினர். இந்த நிகழ்வை ஊடக அமைப்புகள், பொது அமைப்புகள், அரசியல் கட்சிகள் போன்றவை ஏற்பாடு செய்திருந்தன.

## ராவய...

எதனையும் செய்யவில்லை என குறிப்பிட்டுள்ளார் சிறிலங்கா பொலிசாரின் மீது தமக்கு நம்பிக்கை இல்லாமையே இதற்கான காரணம் என விக்டர் ஐவன் தெரிவித்துள்ளார்.

## மட்டக்களப்பு...

மட்டக்களப்பு, காத்தான்குடி, மட்டக்களப்பு, கல்முனை வீதியிலும் படையினரும், பொலிசாரும் பாதுகாப்பு நடவடிக்கைகளையும் தீவிரப் படுத்தியுள்ளனர். மழை பெய்து கொண்டிருந்தபோதிலும் பொது மக்கள் கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

## தமிழ்ச்செல்வன்...

கலந்துகொண்டனர். சந்திப்பின் முடிவில் மாற்றம் பெற்றுச் செல்லும் யுனிசெப்பின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி ரெட்சைபன் அவர்களுக்குத் அரசியல்துறைப் பொறுப்பாளர் அவர்கள் நினைவுப் பரிசு வழங்கினார்.

## சர்வசன...

பொன்றை நடத்த சனாதி பதி சந்திரிகா தீவிரபரிசீலனை செய்து வருவதாகதகவல்கள் தெரிவிக்கின்றன.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகள் கட்டித் தரப்படும் என்பது உட்பட பல உறுதிமொழிகளை வழங்குவதன் மூலம் மக்களின் ஆதரவை பொதுக்கட்டமைப்புக்கு பெற்றுக் கொள்ளமுடியும் இந்த தேர்தலில் சனாதிபதி தனக்குரிய ஆதரவையும் மக்கள் மத்தியில் நாடி பிடித்து அறிந்த கொள் முடியும் என்றும் கருதுகிறார் என அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

ஆனால் சுமார் 70 கோடி ரூபா வில் செலவாகும் சர்வசன வாக்கெடுப்புக்கு ஐ.தே.க, ஜே.வி. பி, ...வை ஏற்கனவே வேறு சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்ட சர்வசன வாக்கெடுப்புமுஸ்தீபுகளின் போது தமது கடும் எதிர்ப்பை தெரிவித்திருக்கின்றன.

இதேவேளை சனாதிபதியின் கட்சிக்குள்ளும் மற்றும் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் வட்டங்களிலும் சனாதிபதியின் இந்த வியூகம் குறித்து அதிருப்தி அலைகள் கிளம்பியுள்ளதாகத் தெரிய வருகிறது. எதிர்வரும் வியாழக் கிழமை இந்தியா செல்லவுள்ள சனாதிபதி அந்நாட்டு அரசிடமும் தனது கூட்டணி அரசை காப்பாற்றுவதற்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவதா? பொதுத்தேர்தல் நடத்துவதா? சாதகமானது என்று ஆலோசனை பெறுவார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## பொதுக்...

நிர்வாகப் பகுதிக்கும் சென்றடைவதை அந்நாடுகள் அவதானிக்கும் என்றும் அவர் மேலும் கூறினார்.

மீளமைப்புக்கான பொதுக்கட்டமைப்பு தொடர்பாக கருத்து தெரிவித்துள்ள கொழும்பிலுள்ள நோர்வே தூதரகப் பேச்சாளர் விடுதலைப்புலிகளும், சிறிலங்கா அரசும் பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக ஆலோசனை நடத்தி வருகின்றனர். விரைவில் சாதகமான தகவல்கள் வெளியாகும் என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

# கண்ணீர் அஞ்சலி



அமரர்

## திரு பிச்சன் செல்லத்துரை

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் பரிசாரராகக் கடமையாற்றி வந்த திரு.பிச்சன் செல்லத்துரை 29.05.2005 காலமானார்.அன்னாருக்கு கிளி.மாவட்ட வைத்திய அதிகாரி அவர்களும் மற்றும் வைத்தியர்கள்,உத்தியோகத்தர்கள், பணியாளர்கள் தமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகிறார்கள்.

மாவட்ட வைத்தியஅதிகாரி,
வைத்திய அதிகாரிகள், பணியாளர்கள்.

(சி.12024)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு மே மாதம் 30 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது